# சம்மாந்துறை பிரதேச சபையின் 03 வது பொது கூட்டறிக்கை 2018.05.15

சம்மாந்துறை பிரதேச சபையின் 03 ஆவது அமர்வு 2018.05.15 ஆம் திகதி செவ்வாய் கிழமை காலை 9.30 மணிக்கு சம்மாந்துறை பிரதேச சபையின் சபா மண்டபத்தில் தேசிய கீதம் மற்றும் இறை சிந்தனையுடன் கௌரவ தவிசாளர் ஏ.எம்.முஹம்மட் நௌசாட் அவர்களின் தலைமையில் ஆரம்பமானது.

**சமூகமளித்த கௌரவ உறுப்பினர்கள்**

| | | |
|---|---|---|
| 01. ஜனாப். ஏ.எம்.எம் நௌசாட் | கௌரவ தவிசாளர் | அ.இ.ம.கா |
| 02. திரு. வீ. ஜெயச்சந்திரன் | கௌரவ உப தவிசாளர் | ஸ்ரீ.சு.க |
| 03. ஜனாப். ஐ.எல்.நஜீம் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 04. ஜனாப். எஸ்.எம்.எம். முஸ்தபா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 05. ஜனாப். ஏ. அச்சி முஹம்மட் | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |
| 06. ஜனாப். யூ.எல். அஸ்வர் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 07. செல்வி. ஆர். வளர்மதி | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |
| 08. திரு. என். கோவிந்த சாமி | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 09. ஜனாப். ஏ.சி. முஹம்மட் சஹீல் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 10. ஜனாப். எம்.ரீ. பௌசுள்ளாஹ் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 11. ஜனாப். ஐ.எல்.எம். மாஹிர் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 12. ஜனாப். ஏ.எம்.எம் றியாஸ் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 13. ஜனாப். ஏ.எல்.எம். ஜிப்ரி | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 14. ஜனாப். எஸ். நளீம் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 15. ஜனாப். ஏ. யூசுப் லெப்பை | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 16. திருமதி. கே.எம். இன்பவதி | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 17. திருமதி. எம்.எஸ். சரீபா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 18. திருமதி. எஸ்.எம். சித்தி நிலுவ்பா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 19. திருமதி. கே.எல். சிஹாமா | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 20. ஜனாப். வை.பீ.எம். முஸம்மில் | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |

**சமூகமளித்த உத்தியோகத்தர்கள்**

| | |
|---|---|
| 01. திரு. எஸ்.கருணாகரன் | உள்ளூராட்சி உதவியாளர் |
| 02. செல்வி. ஏ.எல். நுஸ்றத் பானு | அலுவலக உதவியாளர் |

**கௌரவ தவிசாளர் ஏ.எம்.எம். நௌசாட்**
பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ராஹீம். எல்லாப்புகழும் இறைவனுக்கே, எல்லோரையும் இந்த 03 வது அமர்வுக்கு வரவேற்றவனாக, இந்த அமர்வின் முதல் அம்சமாக கடந்த கூட்டறிக்கை சமர்ப்பித்தலும் அங்கீகாரம் பெறலும்.

இந்தக் கூட்டறிக்கையில் ஏதாவது திருத்தங்கள் இருந்தால்,

**கௌரவ உறுப்பினர் எம்.எஸ். சரீபா அவர்கள்:**
தீர்மானம் 09 ஆளணி மீளமைப்புச் செய்தல், இதற்கமைய அத்தியவசியமாக தேவையான 10 சுகாதார தொழிலாளிகளை தற்காலிகமாக நியமிப்பது பற்றி நான் பிரேரனை செய்யவில்லை.

தீர்மானம் 15 கீழ் உள்ள பந்தியில் Hospital Development Society இற்கு 02 அங்கத்தவர்கள் தெரிவில் கௌரவ உறுப்பினர் முஸம்மில் அவர்களும் நானும் தெரிவு செய்யப்பட்டிருந்தோம்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
நாங்கள் தெரிவு செய்யவில்லை.
நாம் அந்த Recording ஐ பார்த்து திருத்திக் கொள்வேம்.
வேறு ஏதாவது திருத்தங்கள், அப்படி இல்லாத பட்சத்தில் ஒருவர் பிரேரித்து ஆமோதிக்கலாம்.

**கௌரவ உறுப்பினர் எஸ்.எம்.எம். முஸ்தபா அவர்கள்:**
One Correction Page 07 எனது உரையில் இந்த ஊரின் அபிவிருத்திக்காக உருவாக்கப்படும் அல்லது கூட்டப்படும் எல்லா சபைகளுக்கும், எமது சபையின் உறுப்பினர்களையும் உள்வாங்கப்படுவது உகந்தது.

எனது உரையில்
Page 09 இல் 04 ஆம் பந்தியில் காலையில் வீதி வீதியாக விற்கும் நடைபாதை வியாபாரத்தில் கவனத்தில் எடுக்காது அல்லாது, கவனத்தில் கொண்டு ஏழைகளைப் பாதிக்காது……
Thankyou Chairman

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம். மாஹிர் அவர்கள்:**
Honorable Chairman இந்த அறிக்கையில் அதிக குறைபாடுகள் இருக்கின்றது. இனிவரும் காலங்களில் அந்தக் குறைபாடுகள் இல்லாமல் செய்யப்பட வேண்டும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
என்ன குறைபாடு Just Point it out

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம். மாஹிர் அவர்கள்:**
There is lot Omittedin my Spech also

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
வழமையாக இந்த பிரதேச சபையின் Minutes மற்ற சபைகளில், முழுமையாக Reproduce பன்னப்படுவதில்லை. ஆனால் சம்மாந்துறை பிரதேச சபையில் அது முழுமையாக பதிவு செய்யப்படுகின்றது. இதில் நான் அறிந்தமட்டில் நீங்கள் விழித்தவைகள் எல்லாம் மாற்றப்பட்டிருக்கின்றது.ஆனால் உங்களுடைய பேச்சுக்களில்எதுவும் களிக்கப்படவில்லை. அப்படி இருக்குமானால் அதை இந்த சபை அமர்வுக்குப் பின் இருந்து அதை திருத்திக் கொள்ளுங்கள். நான் அறிய எந்த விடயமும் Omitபன்னவில்லை.அந்த Recording இருக்கின்றது. Recording is there, you can listen to the recording.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம். மாஹிர்அவர்கள்:**
உதாரணமாக அங்காடி வியாபாரிகள் சம்பந்தமாக நான் கதைத்த எதுவுமே இதில் குறிப்பிப்படவில்லை.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
உங்கள் பேச்சிலா?

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம். மாஹிர் அவர்கள்:**
தீர்மானம் 12 கீழ், உங்களது உரையில் பொதுச் சந்தையில் இருந்து 200 M க்குள் எந்த ஒரு அங்காடி வியாபாரமும் நடாத்தக் கூடாது என்று உங்கட speechஇல்சொல்லப்பட்டது.அதற்கு நான் சொன்ன எதுவுமே இங்கு குறிப்பிடவில்லை.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
எப்படி அது Omit பன்னுப்பட்டது.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம். மாஹிர் அவர்கள்:**
நான் சொல்வது இதில் அதிகமான குறைபாடுகள் இருக்கின்றன. இதை நாங்கள் ஏற்றுக் கொள்கின்றோம். இருந்தாலும் இந்தக் குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்பட வேண்டும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
வழமையாகOmit பன்னுப்படுவதில்லை.Recordingஇல் கவனமாக இருக்க வேண்டும்.அதனைக் கேட்டு பூர்தி செய்வோம்.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம். மாஹிர் அவர்கள்:**
There area lotof thingஇல்லை.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இதற்காகத்தான் இதனை நேரத்தோடு அனுப்பிவைத்தோம். ஏனென்றால் அப்படியானவைகளைPointசெய்து அதை இந்த சபையில் உடனே Correct பன்னுப்படலாம் என்று. இந்த அமர்வுக்குப் பின் அதனை Point பன்னீர்களென்றால் அதை முடித்துவிடலாம்.

**கௌரவ உறுப்பினர் எஸ்.எம்.எம். முஸ்தபா அவர்கள்:**
Onemore Genaral Opinion Honorable Chairman In your Speech you mentioned Deegarpi Junction my Suggestions to omit it

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
Ok Noted

**கௌரவ உறுப்பினர் எஸ்.எம்.எம். முஸ்தபா அவர்கள்:**
Thankyou

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இந்த சபையின் சம்பிரதாயம், அங்கத்தவர்கள் பேசும் போது எழுந்து நின்று பேச வேண்டும். நான் அதைச் சொல்லவில்லை. கருத்துக்கள் தெரிவிக்கின்ற நேரம் நீங்கள் எழுந்து நின்று உரையாற்ற வேண்டும்.

உங்களுக்கு முதலாவது அமர்வின் கூட்டறிக்கையின் பிரதி வழங்கப்பட்டிருக்கின்றது. இது உத்தியோக பூர்வமாக நீங்கள் பிரதிநித்துவப்படுத்தும் கட்சிகளுக்கு Record Purpose க்காக அனுப்பிவைக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன்.

சென்ற சபையில் நாம் பல தீர்மானங்களை எடுத்திருந்தும் இந்த சபையின் நிர்வாகத்தில் நமக்கு ஒரு பாரிய சவால் இருக்கின்றது. இந்த சபையில் கடமையாற்றுபவர்கள் பலர் இந்த சபையின் நடவடிக்கைகளில் தேர்ச்சி பெறாதவர்கள்.அதனால் வேலைகள் காலதமதமாக நடைபெறுகின்றது. எல்லா வளங்களும் இருந்தும் முடிவுகளை நிறைவேற்றுவதில் தாமதம் இருக்கின்றது.

ஏறத்தாள 48 பதிலீட்டு ஊழியர்கள் நமது சபையின் பட்டியலில் இருந்தும் கடமையாற்றுவதற்கு உரியவர்கள் இல்லை. அதற்காக நான் அந்த விபரங்கள் எல்லாவற்றையும் எடுத்து கௌரவ ஆளுனரோடும், நமது உள்ளூராட்சி ஆணையாளருடனும் எதிர்வரும் காலங்களில் பேசி இந்த ஆளணிகளை ஒழுங்குபடுத்த வேண்டும். உதாரணத்திற்கு 04 பாடசாலைகளின் Teachers நமது Primary Teachers காடரில் இருக்கின்றனர். மற்ற இரண்டு பாடசாலைகளின்

Teachersவேலைத்தொழிலாளிகள் காடரில் வருகின்றனர். இது சபை இல்லாத காலத்தில் Commissioner Office இனால் செய்யப்பட்ட பதவி நியமனங்கள். அதாவது அந்தப் பதவியை ஒழுங்கு படுத்துவதற்காக மாகாண சபை அந்த பாலர் பாசாலைகளின் பொறுப்பை ஏற்ற படியினால் ஒரு குளர்பாடு இருக்கின்றது. இதேமாதிரி 10 பேர் மாகாண சபையினால்Labour Category அமர்த்தப்பட்டிருக்கின்றார்கள்.

அவர்கள் எல்லோரும் தகைமை உடையவர்கள். கிளாக் வேலைக்கு தகைமை உடையவர்கள். ஆனால் அவர்களது Appointment எல்லாம் Labour Category அதனால் லேபர் காடர் 48 பேர் காட்டப்பட்டும் வேலை செய்வதற்கு நமக்கு ஆளணி இல்லை. அதைச் சீர்திருத்தும் பொறுப்பொன்று இருக்கின்றது. அதைச் செய்யாமல் நமக்கு வேலைக்கு உழியர்களை எடுப்பதில் பெரிய ஒரு சிரமம் இருக்கின்றது.

நாம் சென்ற கூட்டத்தில் எடுத்த தொழிலாளர்களை சேர்க்கும் முடிவு நாங்கள் எல்லா பள்ளிவாசல்களிலும், எல்லா காரியாலையங்களிலும் NoticeBoardஇல் அந்த Application Notice அறிவித்தல்கள் மூலம் வந்த எல்லாApplicationகளும்இன்ஸாஅல்லாஹ் 21 ஆம் திகதி தகைமை அடிப்படையில் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள். அதன் பின்னர் அதன் நவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

சபையின் அங்கீகாரத்திற்கான விடயங்கள் உங்கள் எல்லோருக்கும் எல்லா பிரதிகளும் தரப்பட்டுள்ளது. முதலாவது.

**தீர்மானம் 01**

சென்ற மாதம் 02.04.2018 தொடக்கம் 27.04.2018 வரையிலான செலவீனங்களும் மற்றும் கொடுப்பனவுகளுக்குமான செலவு விபரங்களுக்கு அங்கீகாரம் வழங்க இச்சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | யூ.எல். அஸ்வர் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.யூசுப் லெப்பை |

**கௌரவ உறுப்பினர் எஸ்.எம்.எம். முஸ்தபா அவர்கள்:**

தவிசாளர் அவர்களே, செலவீனங்கள், மற்றும் கொடுப்பனவுகள் அங்கீகாரத்தில் மட்டும் தான் போடப்பட்டிருக்கின்றது. மேலதிகமான விபரங்கள் கொடுக்கப்படுமா?

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

No these are expenses only அந்த மாதத்திற்குரிய செலவீனங்கள் எல்லாம் சபை அங்கீகாரத்திற்கு வழமையாக வழங்கப்படுவது.

அடுத்தது வரவு செலவுத்திட்டம்: அதில் சில மாற்றங்கள் செய்யப்பட்டிருக்கின்றது. அந்த மாற்றங்களின் விபரங்களும் அதன் விளக்கங்களும் இருக்கின்றது.

ஏதாவது Clarification அதன் விளக்கங்கள் மற்ற sheet இல் உள்ளது ஏன் அந்த மாற்றங்கள் செய்யப்பட்டிருக்கின்றது என்று.

இதில் உள்ள கருத்துப்படி வேறேதும் ஏதாவது அந்த Budget இல் மாற்றங்கள் செய்யப்பட வேண்டும் என்றால் போன சபையிலும் கேட்டவாறு உங்கள் அபிப்பிராயங்களை சபைக்கு முன் வைக்கலாம்.

கௌரவ உறுப்பினர் அஸ்வர் அவர்கள் Toilet விடயம் சொன்னீர்கள்,

**கௌரவ உறுப்பினர் யூ.எல். அஸ்வர்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, எங்களுடைய சம்மாந்துறை பிரதேசத்திலே அதுவும் குறிப்பாக மலையடிக் கிராமம், சென்னல் கிராமம், கல்லரிச்சல் பகுதிகளில் மலசல கூடங்கள் இன்மை காரணமாக பக்கத்து வீட்டார்களுக்கும் சேதங்கள் ஏற்படுத்தும் வகையில் சுவாசிக்க முடியாத நிலையில் வாழக்கூடிய சந்தர்ப்பங்களில் மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். குமர் பெண்களை வைத்துக் கொண்டு நமது பாணியில் சொல்லப்போனால் மடுவில் வெட்டிக் குந்துறவர்களும் இருக்கின்றார்கள். எனவே இதை சுகாதார அடிப்படையிலேயே நாம் கருத்தில் கொண்டு நமது பிரதேசத்தில் உள்ள மக்களுக்கு மலசலகூடம் அமைத்துக் கொடுப்பது சம்பந்தமாக வருடாந்தம் முடியுமான அளவு 05 இலட்சம் ரூபா எம்முடைய வரவு செலவுத்திட்டத்தில் ஒதுக்கினால் காலப்போக்கில் இந்த மலசலகூட இன்மையை இல்லாமல் செய்யலாம் என்பது எனது அபிப்பிராயம் இதற்கு சபையோர்கள் தீர்மானத்தை எடுத்து தருமாறும்,

அத்தோடு கடந்த 12 வருட காலமாக எமது பிரதேச சபைக்குச் சொந்தமான பாதைகள்UNOPS நிறுவனம் மற்றும் ஏனைய கிராமத்திற்கு ஒரு வேலைத்திட்டம் கமனெகும,RIDPஎன்ற வேலைத்திட்டம் சம்பந்தமாகவும் மாகாண சபையூடாகவும் செய்யப்பட்ட பாதைகள் மிகவும் மோசமாக பராமரிப்பின்றி கானப்படுவதால் அதை பராமரிப்பதற்கு குறைந்தது ஒன்டரை வருடம் அல்லது இரண்டு வருடத்திற்கு ஒரு முறையாவது தார் ஊற்றி செப்பனிடுவதற்கான ஒரு அனுமதியையும் நாம் தீர்மானமாக எடுக்க வேண்டும். என்று வினயமாக கேட்டவனாக,

உதாரணமாக எம்முடைய சாதாரணமான ஒரு கிறவல் Roadஜ 10 இலட்சம் ரூபாய் ஒரு 100 M செய்ய வேண்டிய ஒரு சூழ் நிலையில் இருக்கின்ற போது, சேதமடைகின்ற பாதையை மீண்டும் அதை உடைத்து செய்வதென்றால் பதினைந்து இலட்சம் தேவைப்படும். எம்முடைய ஊரில் அதிகமான பாதைகள் செப்பனிட இருக்கின்ற காரணத்தினால், இது போன்ற பழுதடைந்த பாதைகளை கொத்தி செய்வதற்குமான நிலைப்பாடு இல்லாதவாறு அந்தப் பாதைகளை நாம் பராமரித்து வருவது நல்லது என்பது எனது அபிப்பிராயம். இதற்கு சபையோர்கள் அனுமதி தர வேண்டும் என்று வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இந்த Toilet விடயம் உண்மையாக ஒரு பாரிய விடயம். சபைக்கு நான் நினைக்கின்ற மட்டத்தில் ஒரு Toilet பிட் கட்டி செய்வதென்றால் ஆகக் குறைந்தது 50,000.00 ரூபா தேவைப்படும். ஒருவருக்கு இந்த சபையினால் செலவளிப்பது இது பெரிய சவால். ஏனென்றால் வருமானத்திற்கு ஏற்ற மாதிரி ஒரு பாரிய பிரச்சினையாக இருக்கும்.

சென்ற சபையில் நாங்கள் ஒரு திட்டம் வைத்திருந்தோம். இந்த வைப்புப்பணம் Deposit Bank இல் இன்றைக்கு 08 Milion Security Deposit இல் வைத்தபணம் அரசாங்கத்திற்கு கட்ட வேண்டிய VAT காசி கிட்டத்தட்ட 07 million 15 Million Fixed Deposit இருக்கின்றது.இதில் வரும்Interest ஐ வைத்து இந்த Toilet கட்டுவதற்கு போன சபையிலும் நாம் அப்படி ஒரு தீர்மானம் எடுத்து மாதாந்தம் வாற தொகைக்கு ஏற்ப அந்த செயலை நடைமுறைப்படுத்துவதற்கு ஒரு தீர்மானம் இருந்தது. ஆனால் அதில் வரும் ஒரு நடைமுறைப்பிரச்சினை என்னவென்றால், எப்படி பயனாளிகளைத் தெரிவு செய்வது.

இங்கே என்னோடு சேர்த்து 20 Members க்கு ஒரு Toilet என்றாலும் 20 Toilets வருகின்றது. அல்லது ஒரு criteriaஎப்படி இவங்கள தெரிவு செய்வது. இந்த முடிவு நாம் எடுத்தால் Application நாளாந்தம் வந்து கொண்டிருக்கும். அதில் தேவைக்கேற்ப எப்படிஇனங்கானுவது. என்பதற்கு நமக்கு ஒரு விதிமுறை இருக்க வேண்டும். அதில் உங்களின் அபிப்பிராயங்களை அறிய விரும்புகின்றேன். எப்படி இந்த பயனாளிகளை தெரிவு செய்வது என்பது.

ஒவ்வொரு அங்கத்தவருக்கும் இத்தனை என்று நாம் பிரித்தெடுப்பதா? அல்லது ஒரு பயனாளிக்கு இந்தந்த தகைமைகள் இருக்க வேண்டும் என்ற அடிப்படையில் நாம் முடிவெடுப்பதா? என்று.அதாவது சமுர்த்திபயனாளி என்று சொன்னால் எந்த criteria.சமுர்த்தியில் பல படிகள் இருக்கின்றது. இந்தப்படிகளில் எந்தப்படிகள் பொருத்தமானது. சிலர் சமுர்த்தி பெறுவதற்கு தகுதியிருந்தும் உண்மையாக வறுமையில் வாழ்கின்றனர். அதை எப்படி இணங்கண்டு பாரபட்சமின்றி செயல்படுவது என்பதுதான் எனக்கு இருக்கும் சவால். இல்லாவிடில் ஒவ்வொரு உறுப்பினர்களுக்கும் ஒரு சந்தர்ப்பம் வழங்கி பணம் சேரும் விதத்தில் அதை நடைமுறைப்படுத்தலாம். எப்படியும் செய்யலாம்.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம். மாஹிர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, மலசலகூட வசதி இல்லாதவர்களுக்கு மத்திய அரசாங்கத்தில் குறிப்பாக நகர திட்டமிடல் அமைச்சில் 30,000 ரூபாய் ஒரு பயனாளிக்கு வழங்குவதற்கும்,ஒரு Toilat கட்டுவதற்கு 54,000 ரூபாய் செலவாகும். அதில் 30,000ரூபாவை அரசாங்கம் பங்களிப்பு செய்வதோடு,பயனாளிகள் மீதிப் பணத்திற்குரிய, உதாரணமாக மலசலகூடத்திற்கு குழி வெட்டுதல், மேசனுக்கு உதவியாக இருத்தல் இப்படியானவர்களுக்காக 2017 ம் ஆண்டு கிட்டத்தட்ட 46 குடும்பங்களுக்கு எனது முயற்சியினால் நகர திட்டமிடல் அமைச்சின் மூலம் மலசலகூடங்கள் கட்டுப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இந்த வருடத்தில் எனக்குக்கிடைத்த 85 விண்ணப்பங்களை நாங்கள் சமர்ப்பித்திருக்கின்றோம். இவற்றைத் தவிர மேலதிகமாக இருந்தால் அதே நடைமுறையைப் பயன்படுத்தி எங்களுடைய உறுப்பினர்கள் ஒவ்வொருவருக்கும் 02 பேர் வீதமாவது பரீட்சாத்தமாக சபையினால் வழங்கினால் அது வெற்றியளிக்கும் என்று நான் நினைக்கின்றேன்.

ஒரேயடியாக 54,000 ரூபாவை கொடுக்காமல் 30,000 ரூபாவை கட்டம் கட்டமாக பிரதேச செயலகத்தினால் நடைமுறைப்படுத்துகின்ற அதே திட்டத்தை நாங்களும் நடைமுறைப்படுத்தலாம்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
Town Planning has a Provision?

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம். மாஹிர் அவர்கள்:**
They have Provision

ஒவ்வொருஉறுப்பினர்களுக்கும் 02 பேராவது கொடுத்தால் 20 உறுப்பினர்களுக்கும் 40 பேருக்கு மலசலகூடம் கட்டலாம். இந்த 40 க்கும் நாங்கள் சபையினால் செலவு செய்யும் பணம் 40x30,000 one Point two Million பரீட்சாத்தியமாக செய்து நாங்கள் அதற்கு பணத்தைப் பெறுகின்ற வழிகளை நாம் ஆராயலாம்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
முதல் கட்டமாக அப்படியொரு முடிவு எடுப்போம். ஒவ்வொரு உறுப்பினர்களுக்கும் இரண்டு பேர் சிபார்சு செய்வது, 30,000 ரூபாய் 03 கட்டங்களில் Progress படி சபையினால் அதை வழங்கி மீதிப் பணத்தை அவர்கள் அதற்குரியவைகளை செய்வதற்கும், அதே நேரம் நாம்Town Planningஇல் மற்ற Local Government Ministryக்கு அந்த Proposalsஐ அனுப்புவோம்.

**கௌரவ உறுப்பினர் எஸ். நளீம் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே,மலசலகூடம் அமைப்பதற்காக சபையினால் வழங்கப்பட இருக்கின்ற 30,000 ரூபா தொகை எவ்வளவு காலத்திற்குள் வழங்கப்படும் 03 தவணைகளில் எவ்வளவு காலத்திற்கு வழங்கப்படும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இப்பதான் நாம் அதனை முன்மொழிந்திருக்கின்றோம். அதற்குரிய Budget Provition செய்ய வேண்டும். அதனைச் செய்து விட்டு அதற்குரிய உத்தியோக பூர்வமாக உங்களுக்கு அறிவிக்கப்படும். ஏனென்றால் One Point Two Million எந்த Budget Commitment க்கு கொண்டு வர வேண்டும். கொண்டு வந்தபின் நிச்சயமாக அதற்கிடையில் அரச நிறுவனங்கள் இந்த அமைச்சுக்கள் உள்நாட்டு அமைச்சு,City Planing அவர்களிடம் எமது Proposal அனுப்பி, அதனால் நமக்கு நிவாரணம் பெற முடியுமென்றால் அது இன்னும் இலகுவாக இருக்கும்.இது அரசியலுக்கு அப்பால். ஏனென்றால் இது மக்களின் அடிப்படைத் தேவை.

**தீர்மானம் 02**

2018 வரவு செலவுத்திட்டத்தினை ஏற்றுக் கொள்வதற்கு இச்சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உப தவிசாளர் | வீ. ஜெயச்சந்திரன் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எம்.ரீ. பௌசுள்ளாஹ் |

அடுத்தது தீர்மானங்கள் சபைக்கு சமர்ப்பிக்கப்படும் கடிதங்கள் மனுக்கள் விடயங்கள் நான் அவற்றை ஒவ்வொன்றாக வாசிக்கின்றேன்.

**தீர்மானம் 03**

பழுதடைந்துள்ள 04 Tractor (HW 4157, JX7618, RB 0639, RB 0640), Dump Truckஎன்பவற்றைத் திருத்தம் செய்தல், திணைக்களத்தினால் வழங்கப்பட்ட 02 Trailer களை திருத்தம் செய்வதற்கும் இச்சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.சி. முஹம்மட் சஹீல் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | யூ.எல். அஸ்வர் |

இது உண்மையாக இந்த நடைமுறை நிகழ்வுகள். இது சபைக்கு சமர்ப்பிக்கப்படுவது ஒரு சம்பிரதாயம். தீர்மானங்கள் ஒவ்வொன்றாக எழுதப்பட வேண்டும். அதனால்தான் வாசிக்கின்ற வேலை. அதை வாசித்து முடிந்ததும் ஒருவர் பிரேரித்து இன்னும் ஒருவர் ஆமோதித்தால் நல்லது.

**கௌரவ உறுப்பினர் எஸ்.எம்.எம். முஸ்தபா அவர்கள்:**
Honorable Chairman, இந்த Dump Truckஎன்பவற்றைத் திருத்தம் செய்தல், திணைக்களத்தினால் வழங்கப்பட்ட 02 Trailer களை திருத்தம் செய்தல், என்ன அதற்கு பழுது என்ற Details,எவ்வளவு செலவுகள் என்ற விபரகங்ளுடன் சபைக்கு சமர்ப்பிக்கப்படமாட்டாதா?

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அப்படி என்றால் What happens this is we have to call for the Estimates அதற்குப் பிறகு அந்த Estimatesசபைக்கு Submit பண்ண வேண்டும். சபைக்கு வருவதனால் வேலை துரிதப்படுத்தப்பட வேண்டும்.அதைச் செய்வதென்றால் காலதாமதம் ஆகும். எனக்குப் பிரச்சினையில்லை அதைச் செய்யலாம் முதல் Estimates எடுத்து மீண்டும் சபைக்கு சமர்ப்பிக்கலாம்.

**கௌரவ உறுப்பினர் எஸ்.எம்.எம். முஸ்தபா அவர்கள்:**

Respect Honorable Chairmanஎன்னவென்றால் காலதாமதத்தை கவனத்தில் கொள்வதால் இங்கு வாசிக்கப்படுகின்ற ஒவ்வொரு தீர்மானங்களுக்கும் ஒவ்வொருவரும் இந்த சபையில் விடயங்கள் சொல்லும்போது தீர்மானங்கள் ஒவ்வொன்றாக தவிசாளர் வாசிக்க மற்றவர்கள் கையுயர்த்தி அங்கு Recordசெய்தால் என்ன நடக்குது என்று, இங்கு இருக்கின்ற ஒவ்வொருவருக்கும் தெரியாது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
Expenses come to you no?

**கௌரவ உறுப்பினர் எஸ்.எம்.எம். முஸ்தபா அவர்கள்:**
அதற்கு என்ன வேலைகள்.எங்கு நடைபெறுகின்றது. என்ற ஒரு விளக்கம் சபைக்கு தெரியப்படுத்தினால் சபையில் இருப்பவர்களுக்கும் இலகுவாக இருக்கும் என்பது எனது தாழ்மையான அபிப்பிராயம்.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம். மாஹிர் அவர்கள்:**
Honorable Chairmanஇதே கருத்தைத்தான் சொல்ல விரும்புகின்றேன். என்னவென்றால் 02 விடயங்கள் இருக்கின்றது. சபையின் அங்கீகாரத்திற்கான விடயங்கள்.அடுத்தது சபைக்குரிய கடிதங்கள், முறைப்பாடுகள், மனுக்கள். இந்த முறைப்பாடுகளையும் சபையின் அங்கீகாரத்திற்கான பிரேரனைகளையும் ஆகக் குறைந்தது ஒரு கிழமைக்கு முதலாவது எங்களுக்கு அங்கத்தவர்களுக்கு கிடைப்பதற்கு ஏற்பாடு செய்தால் நாங்கள் இந்த சபைக்கு வரும் போது, இதனைப்பற்றி ஒரு அறிவுடன் வருவோம்.

மாறாக சபையின் தவிசாளர் வாசிக்கின்ற போது இங்கு இருக்கின்றவர்கள் முண்டியடித்துக் கொண்டு ஆமோதிப்பதும், பிரேரிப்பதுமாக இருந்தால் அந்தப் பிரேரனையின் தாக்கத்தை பிறகுதான் உணர்வார்கள். ஆகவே எந்தப் பிரேரனையாக இருந்தாலும், எந்த கடிதங்களாக இருக்கலாம் அவற்றை ஆகக் குறைந்தது ஒரு கிழமைக்கு முன்பாக தந்தால் நாங்கள் தயாராக இருக்கலாம் என்பது எனது தாழ்மையான கருத்தாகும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அதை நான் ஏற்றுக் கொள்கின்றேன். நானும் அதே விடயத்தைத்தான் சொல்லியிருந்தேன். ஆனால் நிர்வாகப்பிரச்சினையால் உங்களுக்கு அது இம்முறை அனுப்பப்படவில்லை. நிச்சயமாக அடுத்த அமர்வில் சபையில் எடுக்க வேண்டிய தீர்மானங்கள் அந்தந்த பிரிவின்Individual Proposals தர வேண்டும் என்று.ஏனென்றால் இது வழமையாக நடைமுறைக்குச் செய்கின்ற வேலைகள். பழுதடைந்த 04 Tractors அதற்கு வேறையாக ஒரு ProposalSectional Head தயாரித்துவழங்க வேண்டும்.இதனூடாகபெட்டி திருத்தப்பட போகின்றதா?அல்லது இஞ்சின் திருத்தப்பட போகின்றதா? என்று உங்களுக்குத் தெரிய வரும்.நிச்சயமாக அடுத்த சபையில் நடைமுறைப்படுத்தப்படும்.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம். மாஹிர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே Estimatesஇருந்தால் தெரியும். அதனை இவ்வளவு செலவளித்து திருத்துவதா அல்லது புதிதாக ஒன்றைக் கொள்வனவு செய்வதா என்ற தீர்மானத்திற்கு வரலாம்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அந்தப் பொறுப்பை நான் எடுத்துச் செய்கின்றேன்.நான் அதனை மாற்ற வேண்டும் என்று நான்Instruction கொடுத்திருக்கின்றேன். ஒவ்வொருProposal உம் அந்த Sectionalhead Secretary இடம் இருந்து வராமல் உரிய வாகனத்திற்குப் பொறுப்பானவர் இந்த வாகனம் திருத்த வேண்டும் என்றால் என்ன காரணங்கள் என்று தெரிவிக்கின்ற போது அந்த தீர்மானம் உங்களுக்கு அனுப்புவதற்கு முன் ஒரு முடிவு எடுக்கலாம். இதை திருத்துவதா?இல்லையா? என்று.ஆனால்

அந்த பொறுப்பை நான் செய்யாமல் இனிமேல் அதனை விபரமாக ஒரு Proposalகளாக சபைக்கு நீங்கள் வாருவதற்கு முன் அனுப்பிவைத்தால், அந்த தீர்மானத்தை அது காலப்போக்கில் உங்களுக்கு விளங்கும். ஆனால் எந்த ஒரு ஒளிவு, மறைவும் இல்லாமல் சகல தகவல்களும் உங்களுக்கு வரும்.அனுபவம் இருப்பவர்களுக்கு தெரியும் ஆனால் அந்தக் கருத்தை உள்வாங்கியவனாக,

இதில் பிரச்சினைகள் என்னவென்றால், இந்த வாகனங்களுக்கு 03 வருடங்களாக ஒரு Maintenance இல்லை.ஒழுங்கா ஒயில் மாற்றுவதில்லை. றேசர் சத்தம் வரும் போது களற்றிப் பார்ப்பதில்லை. சென்ற நிருவாகத்தில் இருந்த அங்கத்தவர்களுக்குத் தெரியும். இப்படியான வேலைகள் பெரிதாக வாரவில்லை.Because Monthly Maintenanceசெய்த படியால். நமக்கு இருக்கின்ற ஆகப்பெரிய சவால் Staff.இது ஒரு Development Origination அதாவது Private Company மாதிரி. ஏனையOfficeகளில் இந்தப்பிரச்சினை இல்லை. இந்த சபைக்கு வருகின்றபெரும்பாலானோர் Education Officeஇல் இருந்து வருபவர்கள்.அவர்களுக்கு File ல் இடும் வேலையைத் தவிர, மற்ற விடயங்களில்அனுபவம் இல்லை. அதனால் இப்ப நீங்கள் ஒரு நாள் Chairman ஆக இந்த,Officeஇல் இருந்தால் உங்களுக்கு விளங்கும்.Details எந்த அளவுக்கு ஒவ்வொரு நுணுக்கமாக பார்க்க வேண்டியுள்ளது. வவுச்சர் எழுதுவதில் இருந்து இந்த சபைக்கு வாருகின்ற அங்கத்தவர்களுக்குத் தெரியும் எந்தளவுக்கு Minute Management செய்ய வேண்டும் என்று,இதுதான் இந்த சபைக்கு இருக்கும் சவால். நிச்சயமாக இன்ஸாஅல்லாஹ் 06 மாதங்களுக்குள் அந்த நிலவரங்கள் மாறவேண்டும். என்ற ஒரு பிரார்த்தனை. அதற்கு முயற்சி எடுக்கின்றேன்.

ஆரம்ப காலத்தில் இந்த சபையின் நடவடிக்கைகளை சுமுகமாக கொண்டு செல்வதற்கு உங்களின் ஆதரவை நான் நாடியிருக்கின்றேன். ஏனென்றால் Co-operation இல்லாவிடில்சபையைக் கொண்டு போவது கஷ்டம். ஒரு நாளைக்கு என்னுடன் வந்திருந்தீர்கள் என்றால் உங்களுக்கு அது தெரியும்.

**கௌரவ உறுப்பினர் வை.பீ.எம். முஸம்மில் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, வாகன திருத்தம் சம்பந்தமாக பாக்கின்ற போது ஒரே கடையில் தான் Purchase நடந்து கொண்டிருக்கின்றது. குறிப்பிட்ட கடையில்தான்Purchase பண்ணுவதாகவும் குறிப்பிட்ட கொராஜ்ஜில் தான் இணக்குவதாகவும் தெரிய வருகின்றது. இதில் வாகனம் வைத்திருந்தவன் என்ற அனுபவத்தில் நான் கூறுகின்றேன். ஒரு சில கொராஜ் களுக்குத்தான் ஒரு சில அனுபவம் இருக்கும். ஹைட்றொலிக் செக்சன் பாக்கக்கூடியவர்களின் கொராஜில் ஹைட்றொலிக் பார்க்க முடியும்.இன்ஞின் திருத்தக் கூடிய பாஸ்ஸிடம் போனால் தான் இன்ஞின் திருத்தலாம்.

இவர்கள் ஒரே ஆளைக் கொண்டு செய்ய வேண்டும் என்ற தீர்மானம் எடுக்கின்றதால், நிச்சயமாக திருப்பித்திருப்பி திருத்தினாலும் அதே பழுதுதான்.அடுத்து சிறிய பழுது வைத்து பெரிய பழுது காட்டப்படுகின்றது. உதாரணமாக இதில் Tractor வைத்திருப்பவர்களுக்குத் தெரியும் ஹைட்றொலிக்கில் உள்ள ஒரு சின்ன சாமான் வேல்வ் வேலை செய்யவில்லை என்றால் வேல்வ் பம் வேலை செய்யவில்லை என சொல்லுவார்கள். அவங்க பம்முக்குரிய Quotation எடுத்துவிட்டு பம் Collect பண்ணிட்டு வேல்வ் திருத்திவிட்டு பம் திருத்தியதாக சொல்வார்கள்.அதில் எந்த Number உம் இல்லை.அச்சும் இல்லை. இததை இந்த சபையில் வாகனத்தில் அனுபவம் உள்ளவர்கள் 03 பேரைத் தீர்மானித்து வாகனத் திருத்த வேலை என்றால் அவசரமாக அவர்களைக் கூப்பிட்டு எந்தக் கராஜ்ஜில் யார் அனுபவமுள்ளவர் என பார்த்து, என்ன பழுது என்பதைப் பார்த்து அந்தப் பழுதுக்கு மட்டும்தான் நாம் அனுமதி கொடுக்க வேண்டும்.
உதாரணமாக ஹைட்றோலிக் பம் களற்ற வேண்டும். லேத்துக்கு போக வேண்டும் என்றால் அது பில் அடிப்படையில் அது நடக்க வேண்டும். அது உண்மையில் செய்ய வேணுமா அல்லது இது

தேவையில்லை, இதைச் செய்தால் போதும் என்பதை சபையோடு தீர்மானிக்க வேண்டும்.பேப்பர் வைசிலோ அல்லது படிப்பு வைசிலோ அத செய்யமாட்டார்கள். அனுபவம் வாய்ந்த நமது உறுப்பினர்கள் இருக்கின்றார்கள். அதில் ஒரு சபைத் தீர்மானம் தீர்மானித்து 02 அல்லது 03 பேர்கள் உள்வாங்கி,எந்த வேலை வந்தாலும் அவர்களின் அனுசரணையில் அதனைக் கொண்டு போனால் நல்லது. இந்த கொராஜில்தான் திருத்த வேண்டும் என்று தீர்மானிக்கக் கூடாது. ஒரு கடையில் தான் சாமான்வாங்க வேண்டும் என்று முடிவெடுக்கக்கூடாது.இந்த சாமான்களின் பெறுமதி அறிந்து அதை செய்வது நல்லம் என்பது எனது கருத்து.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
உங்கள் கருத்தை உள்வாங்குகின்றேன். உங்களுடைய கவனத்திற்கு என்னவென்றால் இந்த சபையில் உத்தியோகத்தர்கள் தீர்மானிப்பதில்லை என்ன Repair என்று.ஒரு றேசரோ அல்லது ஒரு டயர் மாற்றுவதைத் தவிர மற்றMechanical திருத்தங்கள் எல்லாம் இந்த சபையில் அப்படி ஒரு Complaintவந்தவுடன் இஞ்சினியருக்கு அறிவிக்கப்படும். CTB இஞ்சினியர் தான் இந்த சபைக்கு அனுமதிக்கப்பட்டவர்.அவர் பார்த்து Repairஐ Approve பன்னுகின்றார்.அந்த Repairs தான் நடக்கின்றது. வேறு சாரதி மார் சொன்னது அல்ல. கராஜ்களைப் பொறுத்தவரையில் வருடத்தில் ஆரம்பத்தில் கறாஜ் றெஜிஸ்ட்றேசன் கோள் பன்னி அவங்களுடைய பழைய Records பார்த்துஅவங்க எப்படி செயல்பட்டிருக்கின்றார்கள் என்பதை எடுத்துத்தான் அந்த தீர்மானம் எடுக்கப்படுகின்றது. ஆனால் நீங்க சொன்ன கருத்து இருக்கின்றது.

ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு Specialty இருக்கின்றது. ஹைற்றோலிக்குக்கு பெயர் போனவர்கள்இருக்கின்றார்கள். அப்படியான சந்தர்ப்பங்களில் நிச்சயமாக அது கவனத்தில் எடுக்கப்படும். ஆனால் இந்த Repairsஎல்லாம் இஞ்சினியரால்அனுமதிக்கப்பட்ட பின்புதான் செய்யப்பட்டு வருகின்றது.

**கௌரவ உறுப்பினர் வை.பீ.எம். முஸம்மில் அவர்கள்:**
சென்ற காலங்களில் பல விடயங்கள் நடந்துள்ளது. அதை நீங்களும் அறிந்திருப்பீர்கள்.

**கௌரவ உறுப்பினர்கே.எல். சிஹாமா அவர்கள்:**
Dump Truck திருத்துவது தாமதமானாலும் பறவாயில்லை Tractor திருத்தப்பட வேண்டும். ஏனென்றால், குப்பை அள்ளுவதில் தாமதமானால் பொது மக்களிடம் இருந்து முறைப்பாடுகள் வரக்கூடும்.

**கௌரவ உறுப்பினர்ஏ.எம்.எம் றியாஸ் அவர்கள்:**
ஒரு மெக்கானிக் டிவிசன் உருவாக்க முடியாதா?

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
Proposal கொடுக்கப்பட்டுள்ளது. வாகனத்திருத்தத்திற்கான குழுவிற்கு 03 உறுப்பினர்களை தெரிவு செய்யலாம்.

01. கௌரவ உறுப்பினர் வை.பீ.எம். முஸம்மில்
02. கௌரவ உறுப்பினர் எம்.ரீ.பௌசுள்ளாஹ்
03. கௌரவ உறுப்பினர் ஐ.எல்.நஜீம்

இவர்கள் வாகனத் திருத்தங்களை மேற்பார்வை செய்வார்கள்.

**தீர்மானம் 04**

அமீர் அலி பொது நூலகத்திலுள்ள மற்றும் திட்டமிடல் பிரிவிலுள்ள கணனிகளைத் திருத்தம் செய்வதற்கு சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

பிரேரித்தவர் : கௌரவ உப தவிசாளர் வீ. ஜெயச்சந்திரன்
ஆமோதித்தவர் : கௌரவ உறுப்பினர் ஏ.எம்.எம். றியாஸ்

**கௌரவ உப தவிசாளர் வீ. ஜெயச்சந்திரன் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே அமீர் அலி பொது நூலகத்தில் கணனிகள் முறையாகப் பராமரிக்கப்படுவதில்லை. இதற்கு ஒருவரை பொறுப்பாக்கப்பட வேண்டும் அங்குள்ள சில கணனிகள் எவர் வேண்டுமானாலும் பயன்படுத்தக் கூடியதாக உள்ளது. இவைகளைக் கவனத்தில் கொள்வதும் அவசியமாகும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இது இந்த 03 வருடத்தில் நடந்தவைகள். இதனை சீர் செய்ய வேண்டும்

**தீர்மானம் 05**

அவசர நாளாந்த வாகன சுத்திகரிப்பு நடவடிக்கைகளுக்காக Compressor ஒன்றைக் கொள்வனவு செய்வதற்கு சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

பிரேரித்தவர் : கௌரவ உறுப்பினர் எம்.ரீ. பௌசுள்ளாஹ்
ஆமோதித்தவர் : கௌரவ உறுப்பினர் ஏ.எல.எம். ஜிப்ரி

**தீர்மானம் 06**

மஸ்ஜிதுல் மஹல்லா மஹல்லாவிலுள்ள மையவாடியின் மேற்குப்புறமாக உள்ள பிரதேசத்தில் பொதுமக்கள் தமது ஓய்வு நேரத்தினைக் கழிப்பதற்காக Environment Park ஒன்றினை அமைப்பதற்கு சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

பிரேரித்தவர் : கௌரவ உறுப்பினர் யூ.எல். அஸ்வர்
ஆமோதித்தவர் : கௌரவ உறுப்பினர் கே.எல். சிஹாமா

**கௌரவ உறுப்பினர்எம்.எஸ். சரீபா அவர்கள் :**
கௌரவ தவிசாளர் அவர்களே,இதற்கு அனுமதி பெறப்பட வேண்டும். இது மலைசார்ந்த பிரதேசமாக இருப்பதால் பல்வேறு துஸ்பிரயோகங்கள் நடைபெறுகின்றது் எனவே பூங்கா அமைப்பதானால் மக்களின் கருத்துக்களை பெறுவது அவசியமானதாகும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இது பள்ளிவாசல்களின் அனுசரனையில் தான் நடைபெறும். இது பூங்கா அமைப்பதல்ல மையவாடிகளை அழகு படுத்தும் திட்டம். இது ஒரு சூழல் சார்ந்த விடயம். மின் விளக்குகள் இடுவதும், மரங்களை நடுவது போன்றவைகளை செய்து மையவாடிகளை அழகு படுத்துவதுதான் இத் திட்டத்தின் நோக்கம்.

**கௌரவ உப தவிசாளர் வீ. ஜெயச்சந்திரன் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, அக்கரைப்பற்று மையவாடிக்குச் சென்றிருந்தேன். அம் மையவாடியானது மிகவும் அழகாக இந்தது. எனக்கு மைய்யவாடிக்கு சென்றதல்லாமல் ஒரு பூங்காவிற்கு சென்று வந்தது போல் இருந்தது. அம் மையவாடி அழகாக காட்சியளித்தது.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம். மாஹிர் அவர்கள்:**
We will talk about in next meeting

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
This is Just a Proposal மையவாடிகளை அழகுபடுத்தும் எண்ணக்கரு வழமையாக பேசப்படுகின்றது. மையவாடி அமைந்துள்ள இடம் சபையின் அதிகாரத்தில் இல்லை. அதனால்தான் இவ்வளவு காலமும் செய்ய முடியாமல் இருந்தது. நான் நம்பிக்கையாளர் சபையுடன் பேசினேன்.மஹல்லா மஹல்லாதான் பெரிய மையவாடியாகும். தைக்காப்பள்ளியில் அடக்கம் செய்வது நிறுத்தப்பட வேண்டும்.

**கௌரவ உறுப்பினர்ஏ. யூசுப் லெப்பை அவர்கள்:**
இது ஒரு சிறந்த விடயம். சரீபா உம்மாவின் கருத்து வரவேற்கத்தக்கது நாம் இதனை செய்ய வேண்டும். இதற்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இவைகள் முரண்பாடுகள் அல்ல அவர்களின் கருத்துக்கள்.

**தீர்மானம் 07**

திண்மக்கழிவு முகாமைப்படுத்தலுக்காக உக்கும் கழிவுகளுக்கு உரப் பைகளும், உக்காத கழிவுகளுக்கு பிளாஸ்ரிக் கூடைகளும் கொள்வனவு செய்து பொது மக்களுக்கு மாணிய அடிப்படையில் விநியோகித்தல். மற்றும் சேதனப் பசளை தயாரிக்கும் பணிகளை ஆரம்பித்து அதன் மூலம் தயாரிக்கப்படும் பசளை விற்பனைக்காகவும், உரப் பை கொள்வனவு செய்தல் (25 மற்றும் 10 Kg) மற்றும் கழிவகற்றும் வாகனங்களை மூடுவதற்கான தார்போலின் கொள்வனவு செய்வதற்கும் சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | என். கோவிந்த சாமி |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எம்.ரீ. பௌசுள்ளாஹ் |

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
Bag & Backet உக்கக்கூடியதற்குBacket உம், உக்காதவைக்கு Bagஉம் வழங்க வேண்டும்.

**கௌரவ உப தவிசாளர் வீ. ஜெயச்சந்திரன் அவர்கள்:**
எமது பகுதியில் இது நடைபெறுவதில்லை. மாதம் ஒரு முறையாவது எமது வளத்தாப்பிட்டி கிராமத்திற்கு வாகனத்தை அனுப்பவது பற்றி கவனத்தில் எடுக்குமாறு கௌரவ தவிசாளர் அவர்களிடம் கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
கிழமையில் 01 நாள் உக்கக்கூடிய குப்பைகளையும், 02 கிழமைக்கு ஒருமுறை உக்காத குப்பைகளையும்,மாதத்திற்கு ஒரு கிழமை வளவுக் கழிவுகளையும் எடுப்பது நல்லது.என்று நான் நினைக்கின்றேன்.
சென்னல் கிராமத்திற்கு செல்வதில்லை. கொச்சிக்காய் தூளர்ர சந்திக்கு மட்டுமே செல்கின்றது.

**கௌரவ உப தவிசாளர் வீ. ஜெயச்சந்திரன் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, கிராமத்தில் உள்ள உள் வீதிகளுக்குள் வராவிட்டாலும் பிரதான வீதிகளுக்கு மட்டுமாவது வருவதற்கு ஏற்பாடு செய்தால் நன்றாக இருக்கும் என்று நான் நினைக்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர்ஏ. யூசுப் லெப்பை அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, 51 பிரிவுகளிலும் இதனை நடைமுறைப்படுத்த முடியாது. நகர் புறம் வேறாகவும், கிராமப்புறம் வேறாகவும் காட்டப்படுகின்றது.எனவே நகர்ப்புறம் சுத்தமாக வைக்க வேண்டும். எங்களிடம் கூட முறைப்பட்டிருக்கின்றார்கள். நானும் கூட தெருவில் வைத்துள்ளேன்.

சுகாதாரத் தொழிலாளர்களுக்கு அறிவுரைகள் வழங்கப்பட வேண்டும். தரம்பிரிப்பது முக்கியமான தொன்றாகும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

முதலாவது சபைத் தீர்மானத்தில் இதற்கு முடிவு உள்ளது. 04 Tractor பழுதடைந்துள்ளது. ஆனால் தற்போது சீர் செய்யப்படுகின்றது. நான் ஒவ்வொரு நாளும் Visitபோவேன். உங்களுக்கு தெரிய வேண்டும்.இந்த ஊழியர்கள் எமது சபைக்கு முக்கியமானர்கள். மாதத்திற்கு ஒருமுறை கையுறை வழங்கப்பட்டிருந்தது. 03 மாத காலமாக சோப் வழங்கப்பட்டிருக்க வில்லை.அவர்களும் மனிதர்களே, இந்த ஊழியர்கள் தான் நமக்கு நல்ல பெயர்களை வாங்கித்தருபவர்கள். இவர்களுக்கு சலுகைகள் வழங்கப்பட வேண்டும். அதிகாரத்தைப் பயன்படுத்த முடியாது.

காரைதீவுTransfer Station இருந்தது. அது நிறுத்தப்பட்டதால் அட்டாளைச் சேனைக்கு கொண்டு செல்லப்படுகின்றது. தற்போது Tractorஇல் சேகரிக்கப்படும் குப்பைகள் காரைதீவிற்கு வழங்கப்படுகின்றது.

**தீர்மானம் 08**

தற்போது எமது பிரதேச சபைக்குரிய திண்மக்கழிவுகள் 18 கி.மீ. தொலைவிலுள்ள ஒலுவில் ஆலிம் நகரிலுள்ள திண்மக்கழிவு நிலையத்தில் கொட்டப்படுவதால்,நேரம், மற்றும் தேய்மானம் ஏற்படுகின்றது. அதனைக் கருத்திற் கொண்டு காரைதீவிலுள்ள திண்மக்கழிவு நிலையத்திற்கது எமது கழிவுகளை வழங்குவதற்கு சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ. யூசுப் லெப்பை |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.அச்சி முஹம்மட் |

**தீர்மானம் 09**

வேலை மேற்பார்வை கங்கானிமார் இருவருக்கும் இரு கைத் தொலை பேசிகள் வழங்குவதற்கும், இதற்காக மாதாந்தம் ரூபா: 500 கட்டணம் செலுத்தல். மேலும் மாதாந்தம் ரூபா: 1000 எரிபொருள் கொடுப்பனவாக வழங்கவும் சபை ஏகமனதாக தீர்மானிக்குின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.எல்.எம். ஜிப்ரி |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எம்.ரீ. பௌசுள்ளாஹ் |

**தீர்மானம் 10**

சீருடை துணி பெறத் தகுதியான ஊழியர்களுக்கு சீருடை வழங்கவும், தகுதியான ஊழியர்களுக்கு 2018 ஜனவரி - 2018 டிசம்பர் வரை சவர்க்காரம் வழங்கவும் சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

பிரேரித்தவர் : கௌரவ உப தவிசாளர் வீ. ஜெயச்சந்திரன்
ஆமோதித்தவர் : கௌரவ உறுப்பினர் யூ.எல். அஸ்வர்

**தீர்மானம் 11**

ஊழியர்களுக்காக Finger print attendance Recorder ஒன்றைக் கொள்வனவு செய்து பழைய அலுவலகத்தில் பொருத்துவதற்கும், அலுவலகத் தேவைக்கான பதிவேடுகள், படிவங்களை கொள்வனவு செய்யவும் சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

பிரேரித்தவர் : கௌரவ உறுப்பினர் யூ.எல். அஸ்வர்
ஆமோதித்தவர் : கௌரவ உறுப்பினர் ஏ.சி.முஹம்மட் சஹீல்

**தீர்மானம் 12**

Valuation திணைக்களத்தின் கோரிக்கைகமைய, எமது பிரதேச சபைக்குரிய ஆதனவரிக்குரிய ஆவணங்களைப் பேனுவதற்காக 02 அலுமாரிகள் மற்றும் அலுவலக உத்தியோகத்தர்களுக்கு 02 அலுமாரிகள் பெற்றுக் கொடுப்பதற்கு சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

பிரேரித்தவர் : கௌரவ உப தவிசாளர் வீ. ஜெயச்சந்திரன்
ஆமோதித்தவர் : கௌரவ உறுப்பினர் ஏ.எம்.எம். றியாஸ்

**தீர்மானம் 13**

தெரு இலாம்பு திருத்தத்திற்கு தேவையான உபகரணங்களைக் கொள்வனவு செய்யவும் புதிய இணைப்புக்கான Light set பெறவும் சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

பிரேரித்தவர் : கௌரவ உறுப்பினர் கே.எல். சிஹாமா
ஆமோதித்தவர் : கௌரவ உறுப்பினர் ஏ.சி. முஹம்மட் சஹீல்

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
02 நாட்களுக்கு முன்பு சம்புமடுவில் இருந்து வரும் போது ஒவ்வொரு தூனுக்கும் மின்விளக்குகள் காணப்படுகின்றது. இதற்கு கணக்காய்வு உத்தியோகத்தர்கள் கேள்வி எழுப்புகின்றனர். இதை வட்டாரத்திற்குள் ஒழுங்கு படுத்தித் தாருங்கள்.

**தீர்மானம் 14**

தற்போது தற்காலிக அடிப்படையில் கடமையாற்றும் சுகாதாரத் தொழிலாளிகள், சாரதிகள், வேலைத் தொழிலாளிகள் ஆகியோரின் 06 மாத கால சேவை அனுமதி முடிவடைந்துள்ளதால் அவர்களுக்கு 06 மாத கால நீடிப்பு வழங்க சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

பிரேரித்தவர் : கௌரவ உறுப்பினர் ஏ.எல.எம். ஜிப்ரி
ஆமோதித்தவர் : கௌரவ உறுப்பினர் என். கோவிந்த சாமி

**கௌரவ உறுப்பினர் ஏ.அச்சி முஹம்மட் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, மாகாண சபையில் நியமிக்கப்பட்டவர்களுக்கு நாட்கள் குறைவாக வழங்கப்பட்டிருக்கின்றது. இவர்கள் படித்தவர்கள் இவர்களை நீங்கள் கூறியவாறுRevenue க்கு சேர்த்து கூடிய நாட்களை வழங்கலாம் இந்த மாதத்திற்குள் அதை ஒழுங்கு படுத்ததினால் நல்லது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

**தீர்மானம் 15**

பஸார் வீதியிலுள்ள பழைய மார்கட் கடைத் தொகுதியினை புணரமைத்து வாடகைக்கு விட சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | யூ.எல். அஸ்வர் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எஸ். நளீம் |

**தீர்மானம் 16**

கனரக வாகனங்களை பிரதேச சபைகள், பாடசாலைகள், மத நிறுவனங்களுக்கு ஒரு மணித்தியாலத்திற்கு குறைவானால் இலவசமாகவும், அதற்கு மேற்பட்ட ஒவ்வொரு மணித்தியாலத்திறகும் 2500 ரூபா மாணிய அடிப்படையில் வாடகையினைப் பெற்றுக் கொள்வதற்கு சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | என். கோவிந்த சாமி |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.எம்.எம். றியாஸ் |

**கௌரவ உறுப்பினர் வை.பீ.எம். முஸம்மில் அவர்கள்:**
01hour வழங்க முடியாது 04 மணித்தியாலத்திற்கு கொடுப்பனவும் ஏனைய 02 நாட்களுக்கு இலவசமாகவும் வழங்கலாம்

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
பள்ளிவாசல் பாடசாலை கோயிகளுக்கு 02 மனித்தியாலத்திற்கு 4000 ரூபாவும்

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.நஜீம் அவர்கள்:**
2000 ரூபாவை விட கூடுதலாக எடுக்க வேண்டும்

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம்.மாஹிர் அவர்கள்:**
Shcool and Religiousplace free of Charge this is my Opinion

**கௌரவ உறுப்பினர் வை.பீ.எம். முஸம்மில் அவர்கள்:**
சபையில் தீர்மானம் எடுக்க வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம்.மாஹிர் அவர்கள்:**
Why we can’t give the time frame?

**தீர்மானம் 17**

பொது நூலகங்களுக்கான சஞ்சிகைகள் மற்றும் நூல்களைக் கொள்வனவு செய்வதற்கும் சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

பிரேரித்தவர் : கௌரவ உப தவிசாளர் வீ. ஜெயச்சந்திரன்
ஆமோதித்தவர் :கௌரவ உறுப்பினர் ஆர். வளர்மதி

**தீர்மானம் 18**

Clinic Center களுக்காக பிளாஸ்ரிக் கதிரைகள் கொள்வனவு செய்ய சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

பிரேரித்தவர் : கௌரவ உறுப்பினர் யூ.எல். அஸ்வர்
ஆமோதித்தவர் : கௌரவ உறுப்பினர் கே.எல். சிஹாமா

**கௌரவ உறுப்பினர்எம்.எஸ். சரீபா அவர்கள் :**
Clinic Center களுக்கு பிளாஸ்டிக் கதிரைகள் வழங்கும் போது RDHS உடன் கலந்தாலோசித்து வழங்குவது சிறந்ததாக இருக்கும் என்பது எனது கருத்து

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
MPCS காணியில் ஒரு Bus Stand. ஒரு தீர்மானம் கௌரவ பாராளுமன்ற உறுப்பினரால் எடுத்ததாக எனக்கு அறிவித்தார். இத் தீர்மானம் சபையினால் முன்வைக்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். இதற்குMPCS காணியை சுவீகரிப்பதென்றும்எனக்குத் தெரிவித்தார். அந்தத் தீர்மானத்தை உங்கள்முன் வைக்கின்றேன்.

இந்த முறையில் எனக்கு முரன்பாடு உள்ளது. ஏனெனில் இதை உருவாக்குவதற்கு எனது மூதாதேயர்களும் பங்களிப்புச் செய்துள்ளார்கள், இதை MPCS. UDA. பிரதேச சபை மூன்றும் இணைந்து ஒரு கூட்டு முயற்சியாக செய்வது பொருத்தமாக இருக்கும் என்று நான் நினைக்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர்எம்.எஸ். சரீபா அவர்கள் :**
இதில் எல்லோருடைய இணக்கப்பாடும் அவசியமாகும் MPCS இன் இணக்கப்பாடு அவசியமாகும்.

**கௌரவ உறுப்பினர்ஏ. யூசுப் லெப்பை அவர்கள்:**
MPCS பூர்வீகம் மர்ஹூம் மஜீட் MP. அவர்களின் வரிசையில் வந்தது அவர்களின் சொந்தக் காணி

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இதுக்கு 5 ஏக்கர் காணியை விற்றே இந்த MPCS பதிவு செய்யப்பட்டது.

**கௌரவ உறுப்பினர் எஸ்.எம்.சித்தி நிலூவ்பா அவர்கள் :**
இவ் Bus நிலையத்தை அனைவரும் ஒற்றுமையாக செய்ய வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் ஏ.அச்சி முஹம்மட் அவர்கள்:**
இதற்கு அங்கீகாரம் வழங்கப்பட வேண்டும். இது அமைக்கப்பட்டவுடன் எமக்கே சொந்தமாகும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

நாம் MPCS ஐ புறக்கணித்து இதை செய்ய முடியாது அதைச் செய்வதென்றால் MPCS கோட்டுக்குச் செல்லும் I spoke with UDA directorPriyani Nawarathu

சென்ற சபை காலத்தில் Bus stand கடைகள் Washing Room, multy peppers, Building, Petrol set எல்லாவற்றையும் உள்ளடக்கிய Public Private Partners sipமூலமாக UDA, MPCS, பிரதேச சபை மூன்றும் சேர்ந்து செய்வதற்கு ஒரு திட்டம் இருந்தது. இந்த முறையில் இந்தத் திட்டம் செயற்படுத்தப்பட வேண்டும் என்பது எனது விருப்பம்.

இந்த Proposal இல் Bus Stand and Shops, Washing Room with Locker, Public Private partnership மூன்றும் சேர்ந்து Proposal ஆக போக வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் வை.பீ.எம். முஸம்மில் அவர்கள்:**

கடைகள் அமைக்கும் போது குறிப்பிட்ட அளவு கடைகள் MPCS க்கு வழங்கினால் MPCSக்கு வருமானம் கிடைக்கும். அதில் நமக்கும் கடையறைகள் கிடைக்கும். இதில் வங்கி துறை உள்வாங்கப்படுவதன் மூலம் கூடுதலான வாடகை கொடுத்து Private Landக்கான இந்த சபையில் ஒரு Bank Complexஏதாவது ஒரு குறிப்பிடப்பட்ட இடத்தில் இதே CTB Proposal மாதிரி சகல வங்கிகளும் ஒரு இடத்தில் எடுத்து அந்தக் கட்டடத்தை ஏதோ ஒரு வகையில் அரசாங்கத்தினூடாக கட்டி அதனால் வரும் வாடகை கூட பிரதேச சபைக்கு வரும். என்று சொன்னால் இன்னும் இந்த ஊர் சபை பெரிய மட்டத்திற்கு போறத்திற்கு இருக்கும்.இதையும் கருத்தில் கொண்டு ஏதாவது ஒரு வகையில் உரிய அமைச்சர்களோடு தொடர்பு கொண்டு Bank Complex உதாரணமாக பிரதேச சபை இடத்தைக் கொடுத்தாலும் பரவாயில்லை. எல்லா Bank உம் அதுக்குள்ளே எடுக்கலாம். வெளிநாடுகளில் எல்லா Bank உம் Bank Complex இல்தான் இருக்கும். இதனை பிரதேச சபையினூடாக செய்தாலும் கூட பின்னுக்கு நமக்கு ஒரு நலவாக இருக்கும். கௌரவ தவிசாளர் அவர்கள் செய்கின்ற Hotel மாதிரி நாமே செய்து நாமே உழைக்கக்கூடிய,சபையிலே வைக்கக்கூடிய Proposal அதற்கமைவாக நாம் ஒரு எதிர்காலத்தில் ஒரு Bank Complex எல்லாவற்றையும் ஒரு இடத்தில் வைத்து PrivateBank எல்லாவற்றையும் ஒரு இடத்தில் வைத்து பிரதேச சபை கட்டடத்திற்கு உள்வாங்கப்படக் கூடியதாக இருக்கும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

அதற்கு ஏற்கனவே ஒரு Proposal UDA இல் இருக்கின்றது. சபூர் சனசவும் UDA உம் பிரதேச சபையும் சேர்ந்து அந்த Land இல் ஒருBanking Complexஅது சென்ற சபையில் Proposal எடுத்தது UDA வில் உள்ளது.சபூர் சனசவைப் பொறுத்தமட்டில் அவர்களுக்கு உறுதி இருக்கின்றது. அது அரச காணியல்ல.

**கௌரவ உறுப்பினர் ஏ.அச்சி முஹம்மட் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, ஒரு உண்மையை ஒரு சரித்திரம். விளங்காதவர்களுக்கு சொல்ல வேண்டும். அந்த வளவு எடுத்துக் கொடுத்த மனிதன் இருக்காரே அவரின் வீட்டுக்கு எதிராக இருக்கின்ற இரண்டு பாலம் போட்டு விட்டு மீதமாக கொஞ்சக்கல் இருந்தது. பள்ளிவாசல் கல்லும் பக்கத்தில் இருந்தது. ஒரு தனி நபர் வந்து கேட்கிறார், இந்த கொங்றீட் கல் பொதுவானது தானே, அரசாங்கத்திட தானே இதில் இரண்டு கூடையை எடுத்துநாளைக்குத் தருகின்றேன் என்று. அதற்கு அந்த மனிதன் கூறினார் நீ அதில் எடுக்க வேண்டாம். உனக்கு வேனுமென்றால் பள்ளிவாசல் கல்லில் எடுத்துக் கொண்டு போ. நாம் குறிப்பிட்ட ஆட்களுக்குத்தான் பதில் கூற வேண்டிவரும். இதில் எடுத்தால் நீ மறுமையில் இலங்கையில் இருக்கின்ற அத்தனை பேருக்கும் பதில் கூற வேண்டும். இப்படிக் கூறி பொதுச் சொத்தைப் பராபரித்த ஒரு மனிதனின் இடம்.

அவ்விடத்தில் பொதுவான ஒரு Town என்று செல்லக்கூடிய ஒரு நகரம் உருவாவதற்கு நாம் எல்லோரும் எங்களால் முடிந்த அளவு முடிந்த உதவிகளை கட்டாயம் செய்துஅந்த ஆத்மா சாந்தியடைகின்ற அளவுக்கு எங்கட நடவடிக்கைகள் இருக்க வேண்டும். வரும் அபிவிருத்தி எங்கள் சபையினால் அல்லது MPCSஇனால் தடைப்பட்டால் உண்மையாக அந்த ஆத்மாவுக்கு பலன் இல்லாமல் போய்விடும். அது மட்டுமல்ல அந்த சங்கம் பதிகின்ற நேரத்தில் காசு எடுத்துக் கொண்டு செல்கின்ற நேரம் அந்தக் காசி Railway இல் வைத்து களவு போனவுடன் அடுத்த செக்கன் அவரது மனைவிக்கும் தெரியாமல் வந்து அவருடைய வயலை விற்று மீண்டும் போய் அவர் சங்கத்தை பதிந்துள்ளார். அப்படிப்பட்ட ஒரு கன்னியவாணின் இடத்தில் நல்லதொன்று வாருவதை நாங்கள் எக்காரணம் கொண்டும் பொதுவாக என்னைப் பொறுத்தளவில் நாங்களும் மரணத்தை எதிர் நோக்குகின்றவர்கள்தான். நான் அந்த மனிதனின் இடத்தில் அப்படியானதைக் கொண்டு வருவதை வரவேற்கின்றேன்.

நாங்கள் அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று தாழ்மையாக கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ உப தவிசாளர் வீ. ஜெயச்சந்திரன் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இந்த Bus Stand என்பது சம்மாந்துறைக்குப் பொருத்தமானது ஏற்றுக் கொள்கின்றோம். இந்த Bus Standஅமைப்பதற்கு இந்தfund Release பன்ன Ministryதயார் என்றால் சம்மாந்துறையில் தேவையான இடம் இருக்குதென்றால் சபை உறுப்பினர்கள் நாங்கள் எல்லோரும் இதற்கு சம்மதமென்றால் அதில் உள்ள தடை என்னவென்று பார்த்து அந்த தடையை நாம் நடுநிலையாக நின்று நிவர்த்தி செய்ய வேண்டியதுதானே. இல்லையாயின் ஒரு குழுவாக இருந்து அதை செயற்படுத்த வேண்டும். ஏனென்றால் இன்னும் நமக்கு இருப்பது ஒன்னரை வருடம் தான். இந்த City PlanningMinisty அடுத்த வருடம் தேர்தலின் பின் என்ன நடக்கப்போகுதென்று தெரியாது.ஆகவே 03 வருடத்திற்கு முன் திட்டமிட்ட ஒரு திட்டம். இப்பேது புதிதாக ஒரு திட்டம். ஒரு பேச்சு வார்த்தையை நடாத்தி ஒரு முடிவுக்கு வர வேண்டியதுதான்.எது தடை அந்தத்தடையை நாம் பேசி முடிவெடுப்போம்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இதில் ஒரு தடையும் இல்லை. இதன் அனுகுமுறையத்தான் கூறுகின்றேன்.MPCSஉம் தடையில்லை MPCSசொல்கிறது எங்களையும் இதற்குள்ள உள்வாங்குங்கள் என்றுதான்.

**கௌரவ உப தவிசாளர் வீ. ஜெயச்சந்திரன் அவர்கள்:**
அதற்கு ஒரு குழு அமைத்து. இரு சாராரும் பேச்சுவாரத்தை நடாத்தி நிறைவு செய்ய வேண்டியதுநமது கடமையாக இருக்கும்.அதற்கான ஏற்பாட்டினைச் செய்யுங்கள்.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம்.மாஹிர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, நமது மூதாதேயர்கள் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியிலே இந்தக் Co-operative ஆரம்பித்தார்கள். எதுக்காக ஆரம்பித்தார்கள் சம்மாந்துறை மக்களின் நன்மைக்காக ஆரம்பித்தார்கள். இப்போது கால மாற்றம் ஏற்பட்டிருக்கிறது.சம்மாந்துறைக்கு முக்கியமாகத் தேவைப்படுகின்ற Bus Stand உடன் கூடிய பல அபிவிருத்தி திட்டங்கள். இவைகளை அபிவிருத்தி செய்வதற்கு நகர திட்டமிடல் அமைச்சால் நகர திட்டமிடலுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. எனக்கு தெரிந்த வகையில் அம்பாரை மாவட்ட அபிவிருத்திக் குழுக்கூட்டத்தில் இந்த Co-operativeகாணி UDA க்கு vest பன்னி தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கின்றது. அந்த சந்தர்ப்பத்தில் பிரச்சினையை நாம் இன்னும் கூடுதலாக பெரிதாக்கி போகாது இந்த சபை இந்தத் திட்டத்திற்கு அனுமதி வழங்குகின்றது. என்ற முடிவை நாங்கள்எடுப்போம்.

BusStandஇந்த Building Complex வருவதற்கு சபையின் ஆதரவை ஏகமனதாக தெரிவிப்போம். Legal Pointஅவங்க பார்த்துக் கொள்ளட்டும்.ஏனென்றால் பழி எங்கள் மேல் வரக்கூடாது. காசு இருக்கு.UDAக்கு இந்தக் காணியைக் கொடுக்கச் சொல்லி அம்பாரை மாவட்ட அபிவிருத்தி சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. சம்மாந்துறை அபிவிருத்தி குழுக் கூட்டத்திலும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றது. அம்பாரை அபிவிருத்தி குழுக் கூட்டத்திலும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றது. அப்படி இருக்கின்ற சந்தப்பத்தில் நாங்கள் இதனை பூதாகரமான பெரிய பிரச்சினையாக ஆக்காது, ஊருக்கு நன்மை பயக்கக் கூடிய பெரியதொரு திட்டத்திற்கு வருகிறதென்றால்,இந்த சபை ஏற்றுக் கொள்கின்றது என்ற தீர்மானத்தை இன்றைக்கு நிறைவேற்றுவோம். ஏனென்றால் எங்களது சபையின் மேல் பழிவரக்கூடாது. இந்த சபை வந்துதான் வரப் போன Bus Stand ஐ இல்லாமலாக்கியது என்ற பழி வரக்கூடாது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
ஒன்று நீங்க விளங்க வேண்டும். அந்த அம்பாரை மாவட்ட ஒருங்கினைப்பு குழுக் கூட்டத்திலேயோ, சம்மாந்துறை DCCயில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கும் இந்த சபைக்கும் எந்தத் தொடர்பும் இல்லை.அது அரசியல் ரீதியாகவோ, அதிகார ரீதியாகவோ எடுக்கப்பட்டது. ஆனால் இந்த சபை அதற்கு எதிர்ப்பில்லை என்று தீர்மானம் எடுப்பதில் பிரச்சினையில்லை.நாம் ஒவ்வொருவரும் எதிர்ப்பில்லை. ஆனால் இந்த MPCS காணிய சுவீகரிக்கின்றது என்றதற்கு இந்த சபை முடிவெடுக்கலாமா? என்பதுதான் என்னுடைய ஒரு கேள்வி. அதாவது MPCS இந்த Project க்கு ஒரு பங்காளியாக வர வேண்டும் என்பது பொதுவான ஒரு அபிப்பிராயம்.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம்.மாஹிர் அவர்கள்:**
தடங்களுக்கு மன்னிக்க வேனும், சம்மாந்துறை பிரதேச சபைக்கும் MPCS க்கும் Legal ஆக ஏதாவது கனக்சன் இருக்கிறதா?

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
Nothing

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம்.மாஹிர் அவர்கள்:**
So, எங்களுக்கு சட்ட ரீதியாக இல்லாத ஒரு பிரச்சினையப் பற்றி ஏன் ஆலோசிக்க வேண்டும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
நாம் மக்கள் பிரதிநிதிகள் தானே நாம், இன்று ஒரு சபை சம்மாந்துறை MPCS காணியை சுவீகரிப்பதற்கு முடிவெடுக்கிறதா?

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம்.மாஹிர் அவர்கள்:**
இங்கே அதுவல்ல Issue சம்மாந்துறை பிரதேச சபை சம்மாந்துறையில் அமையப் போகும்CTB Stand க்கு அனுமதி கொடுக்கிறதா இல்லையா?

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அதில் மாற்றம் இல்லை.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம்.மாஹிர் அவர்கள்:**
தீர்மானத்தை நிறைவேற்றுங்கள் இந்த சபை இதனை ஏற்றுக் கொள்கின்றதென்று.இரண்டாவது விடயமாக மற்றவைகளை ஆராயலாம்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
No problem.

**கௌரவ உறுப்பினர் எஸ்.எம்.எம். முஸ்தபா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இங்கு முன்வைக்கின்ற விடயம் என்னவென்றால் ஒரு ஊரில் அபிவிருத்தி ஒன்று கொண்டுவரப்படுகின்றது. அந்த அபிவிருத்தியின் முடிவில் இந்த CTB ஆனது ஒரு பொது மக்கள் பாவனைக்குரிய மலசலகூடங்களுடன் அடங்கிய ஒரு பஸ் தரிப்பு நிலையம் உருவாக்கப்படுகின்றது. அந்த உருவாக்கத்தில் நீங்கள் கூறியது போன்று அல்லது உங்களால் உருவாக்கப்படுகின்ற ஆரம்பத்தில் அந்த முன்மொழிவு செய்யப்பட்டது போன்று. அது ஒரு மாஸ்ட் Plan னோட அந்தக் காணியடங்கலாக அந்த வீதிகள் சுத்தமாக இருந்தாலும் கூட அன்றைக்கு அந்த குறிப்பிட்ட பிரதேசத்தில் ஒரு குறிப்பிட்ட நில அளவையில் பஸ் தரிப்பு நிலையமும் பொது மக்களுக்கான மலசலகூடமும் அடங்கலான ஒரு பஸ் தரிப்பிடம் அமைக்கப்படுகின்றது.

அது விஸ்தரிப்புக்கு வரலாம். முடிவு என்னவென்றால் அந்த உரிய அமைச்சினால் அது முன்வைக்கப்பட்டு அந்தக்கட்டடம் பூர்த்தியாக்கப்பட்டு அதன் இறுதியாக அது ஒப்படைக்கப்பட இருக்கின்றது பிரதேச சபைக்கு. பிரதேச சபைதான் அதை கையகப்படுத்தி, பராமரிக்க வேண்டிய பொறுப்பு பிரதேச சபைக்கு இருக்கின்றது. எனவே அந்தக் கட்டத்திற்கான முன் மொழிவு, அந்தக்கட்டம் ஒன்று அமைக்கப்படுகின்ற முன்மொழிவை சம்மாந்துறை பிரதேச சபை செய்ய வேண்டும். பிரதேச சபையினூடாக சம்மாந்துறையில் பஸ் தரிப்பு நிலையம் ஒன்று உருவாக்கப்படுவதற்கான ஒரு முன் மொழிவினை இந்தப் பிரதேச சபையினூடாக செய்வதற்கு நாங்கள் அதை முன் மொழிகின்றோம்.மற்ற உறுப்பினர்கள் என்னுடைய அவதானத்தில் குறிப்பிடுகின்ற போது, குறிப்பிட்ட வரை பார்க்கின்ற போது பெரும்பான்மையான உறுப்பினர்கள் சம்மாந்துறையில் பஸ் தரிப்பு நிலையம் ஒன்று அமைவதற்கு உசிதம் என்றகருத்துக்கும்,

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
பெரும்பான்மை அல்ல, எல்லோரும். அதில் மாற்றுக் கருத்து இல்லை.

**கௌரவ உறுப்பினர் எஸ்.எம்.எம். முஸ்தபா அவர்கள்:**
அவ்வாறாக இருக்குமாக இருந்தால்

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
ஒருவரும் அதற்கு மாற்றுக் கருத்து வைக்கவில்லை.

**கௌரவ உறுப்பினர் எஸ்.எம்.எம். முஸ்தபா அவர்கள்:**
அவ்வாறாக இருக்குமானால். கௌரவ தவிசாளர் அவர்களே, சம்மாந்துறை பிரதேச சபையினூடாக உரிய நிறுவனங்களுக்கு இவ்வாறான இந்த பஸ் தரிப்பு நிலையத்தை அமைத்துத்தருவதற்கான முன் மொழிவு ஒன்றை செய்வதற்கான தீர்மானம் ஒன்றை இன்றைக்கு எடுப்போம். என்பது எனது தாழ்மையான அபிப்பிராயம். அதற்கான எனது தாழ்மையான அபிப்பிராயத்தை தெரிவிக்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
ஏக மனதாக இந்த சபை தீர்மானிக்கின்றது. சம்மாந்துறையில் ஒரு பஸ் தரிப்பு நிலையம் வர வேண்டும் என்று. அதில் எந்த Doubtம் இல்லை அதைத்தான் நான் சொன்னன்.

**கௌரவ உறுப்பினர் எஸ்.எம்.எம். முஸ்தபா அவர்கள்:**
WithRespect அந்த முன் மொழிவு சம்மாந்துறை பிரதேச சபையூடாக நடக்க வேண்டும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
சம்மாந்துறையின் பிரதேச சபை இந்த அமர்வில் சம்மாந்துறையில் பஸ் தரிப்பு நிலையத்தை உருவாக்குவதை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

**கௌரவ உறுப்பினர் எஸ்.எம்.எம். முஸ்தபா அவர்கள்:**
தீர்மானம் மட்டுமல்ல அதனை முன்மொழியவும் செய்ய வேண்டும். இங்கு எடுக்கப்பட்ட தீர்மானம் நாங்கள் ஒரு தீர்மானத்திற்கு வந்தால் பஸ் தரிப்பு நிலையம் ஒன்றை நாங்கள் உருவாக்குவதென்றால் உரிய அமைச்சுக்கு அதற்கான முன்மொழிவொன்று செய்யப்பட வேண்டும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அது தீர்மானம் தானே போகும்.

**கௌரவ உறுப்பினர் A.அச்சி முஹம்மட் அவர்கள்:**
தீர்மானத்தினூடாக எங்களது கௌரவ தவிசாளர் அவர்கள் அனுமதியை வழங்க வேண்டும். அதாவதுஇதற்கு நீங்கதானே அனுமதி வழங்க வேண்டும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இதற்கு 03 கட்டங்கள் இருக்கிறது.ஒன்று அந்த Proposal கொடுக்கிறது.இப்போ இதில் சொன்ன மாதிரி இரண்டு முடிவுகள் எடுக்கப்பட்டிருக்கின்றது.இந்தக் காணிய சுவீகரிக்கிறதென்று. அது இருக்க, இப்போது சம்மாந்துறையில் Bus Stand வர வேண்டும் என்று சொன்னால், சம்மாந்துறை பிரதேச சபை அந்த தீர்மானம் எடுக்க வேண்டும். அத் தீர்மானத்தினை அனுப்பியதன் பிறகுதான் மற்றBulding Proposal எல்லாம் வரும். அதற்கு அங்கீகாரம்தான் வழங்க வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் A.அச்சி முஹம்மட் அவர்கள்:**
இதில் ஒரு மாற்றம் இந்த பல் நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் வளவினை சுவீகரிப்பதல்ல அபிவிருத்தி செய்வதுதான் இதன் எண்ணம்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இல்லை சொற்களை எப்படியும் மாற்றிப் போடலாம். அது பிரச்சினையில்லை.அந்தப் பிரச்சினைய கௌரவ உறுப்பினர் மாஹிர் சொன்னமாதிரி அதனை வேறாக விடுவோம். நாம் இந்த முடிவு எடுத்து அனுப்புவோம். அதன் பின்புPlan வரும் நேரம் எவ்வளவு விரைவாக நாம் அதனை Approveசெய்யஇயலுமோ அதனைApproveசெய்வோம். அது பிரச்சினையல்ல

**தீர்மானம் 19**

நகர அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் சம்மாந்துறை MPCS வளவில் Bus Stand அமைப்பதற்கு ஒத்துழைப்பு வழங்க சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | யூ.எல். அஸ்வர் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | கே.எல். சிஹாமா |

தேநீர் இடைவேளையினைத் தொடர்ந்து சபையின் 02 வது அமர்வு ஆரம்பிக்கப்பட்டது.

## கௌரவ உறுப்பினர்களின் மனுக்கள் / பிரேரணைகள்

**கௌரவ தவிசாளர் அவர்கள்**
சபையின் அடுத்த நடவடிக்கை, கௌரவ உறுப்பினர்களின் மனுக்கள். இந்த மனுக்கள் தொடர்பாக ஒருProcedure விளங்கப்படுத்த வேண்டும். கௌரவ உறுப்பினர் ஒரு பிரேரனையை இந்த சபைக்கு முன்வைத்தவுடன் இன்னொரு உறுப்பினர் அதை ஆமோதிக்க வேண்டும். அதன்

பிறகுதான் கருத்துக்களை யார் முன்வைப்பெதென்றாலும் உங்களது கைகளைக் காட்டினால் நான் அதற்கு அனுமதி வழங்குவேன். ஆனால் எந்த பிரேரனையும் முன் வைத்து அது ஆமோதிக்கப்படாவிட்டால் அது நிறைவேறாது.

கௌரவ உறுப்பினர் மாஹிர் அவர்களினால் முன்வைக்கப்படும் பிரேரனை.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம்.மாஹிர் அவர்கள்:**

பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ராஹிம், கௌரவ தவிசாளர் அவர்களே,Sister city என்கின்றProject இல் சகோதர நகரத் திட்டம் என்கின்ற ஒரு பிரேரனையை இந்த சபைக்கு முன்வைக்கின்றேன்.

சம்மாந்துறை பிரதேச சபையினை ஜப்பானின் ஜிபு மாவட்டத்தின் ஹஷீமா நகரத்துடன் ஒன்றினைப்பதற்கான ஒரு திட்டத்தினை பிரதேச சபையின் அங்கீகாரத்திற்காக முன்வைக்க விரும்புகின்றேன்.

சகோதர நகரத்திட்டம் என்பது ஒரு நாட்டின் உள்ளூராட்சி சபை இன்னுமொரு நாட்டின் உள்ளூராட்சி சபையுடன் இணைந்து கொள்வதன் மூலம், இரண்டு நகரங்களுக்குமான பரஸ்பர ஒத்துழைப்பு நல்லெண்ன விஜயங்கள் பொருளாதார, சமூக, கலாசார உறவாடல்கள் என்பவற்றை மேற்கொள்வதன் மூலம் இரண்டு நகரங்களுக்கும் இடையிலான உறவினை வலுப்படுத்தி அதன் மூலம் நன்மைகளை இரண்டு நகரங்களும் பெற்றுக் கொள்வதாகும்.

இவ்வகையில் எனக்கு இருக்கின்ற தனிப்பட்ட உறவுகளைப் பயன்படுத்தி ஜப்பானின் ஹஷீமா நகரத்துடன் சம்மாந்துறை நகரத்தினை ஒன்றினைப்பதற்கான ஒரு திட்டத்தினை நான் முன்மொழிய விரும்புகின்றேன். பிரதேச சபை இதனை அங்கீகரிக்கின்ற பட்சத்தில் இத்திட்டத்தினை முன்னெடுத்து செல்வதற்கு தயாராக உள்ளேன்.

ஹஷீமா நகரம் ஜப்பானில் உள்ள இலங்கையுடன் நெருக்கமான தொடர்பினை கொண்டுள்ள ஒரு நகரமாகும். அதன் சனத்தொகை சம்மாந்துறை சனத்தொகையோடு சரிசமமாக காணப்படுகின்றது. மற்றும் ஹஷீமா நகரம் விவசாயத்தினை பிரதானமாகவும், இலகு கைத்தொழிலை உப பொருளாதார மூலமாகவும் கொண்ட ஒரு நகரமாகும். மேற்படி நகரம் 2020 ஆம் ஆண்டு ஜப்பானில் இடம்பெறவுள்ள ஒலிம்பிக் போட்டியின் போது இலங்கையின் நலன்களைக் கவனிப்பதற்காக நியமிக்கப்பட்டுள்ள ஒரு நகரமுமாகும்.

எனவே ஹஷீமா நகரத்துடன் உறவுகளை ஏற்படுத்துவது சம்மாந்துறை நகரத்திற்கு பல நலன்களைக் கொண்டுவந்து சேர்க்க முடியும். எனவே, மேற்படி திட்டத்தனை சபையின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கின்றேன்.

**தீர்மானம் 20**

சம்மாந்துறை நகரம் ஜப்பானின் ஜிபு மாவட்டத்தின் ஹசீமா நகரத்துடன் ஒன்றினைப்பதற்கான ஒரு திட்டத்தினை அமுல்படுத்துவதற்கு சபை ஏக மனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஐ.எல்.எம். மாஹிர் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எம்.எஸ். சரீபா |

**கௌரவ தவிசாளர்அவர்கள்:**
இது தொடர்பான கருத்துக்கள் ஏதாவது கூற இருந்தால்,

கதைப்பெதென்றால் தலைவரின் அனுமதியின்றி கருத்துச் சொல்லக்கூடாது.

உண்மையில் இந்த முன்மொழிவினால் இந்த சபைக்கு உண்மையாக ஒன்று சர்வதேச அங்கீகாரம். இன்னொரு நாட்டின் ஓரு கிராமத்தோடு ஒன்றிணைவது என்பது இரண்டு கலாசாரங்களும் சந்திக்கின்றது. இது சரியான முறையில் நடக்குமானால், நானும் ஜப்பானுக்கு போன நேரத்தில் அந்த தொடர்பை ஏற்படுத்தியவரின் வீட்டுக்கு சென்றிருந்தேன். அங்கு அவர்எப்படியான சமூக நிலையில் இருக்கின்றார் என்பது நன்றாகத் தெரியும். ஏனென்றால் அவரது தொழில் தொடர்புகள் இதனை ஒரு உயர் மட்டத்தில் கொண்டு போகும்.

உங்களுக்கு தெரிந்திருக்குமோ தெரியாது இந்தத் தொடர்புகளினால் இந்த நாட்டுக்கு ஒரு காலமும் நமக்கு கொண்டுவர முடியாத தொழில்நுட்பம் மட்டுமல்ல சில வாகன வசதிகள் எல்லாம் சபைகளுக்கு வந்திருக்கின்றது. ஏனென்றால், ஜப்பானில் இவங்களுக்கு ஒரு கலாச்சாரம் இருக்கின்றது. இவ்வளவு கார் வந்து இறங்குவதற்கு காரணம் அங்குபழுதாகும் வரை வைத்திருப்பதில்லை. இங்கு பல உதவிகளைப் பெறலாம். ஒன்று இந்த நாட்டுக்குப் போனால்தான் தெரியும். அந்த நாட்டில் இருக்கின்ற சமூகக் கட்டுப்பாடு. இப்போது நாம் இப்படி இருக்கின்றோம் அடுத்து ஒரு தொடர் வீடுகள் ஐந்தாறு வீடு இருக்கும். ஒரு சத்தம் வராது. அடுத்த வீட்டில் பிள்ளைகள் இருக்கின்றதாஎன்பது கூட தெரியாது. அப்படி There is Discipline. அப்படியான ஒரு நாட்டோடு தொடர்பு கொள்வது என்பது இந்த சபைக்கு ஒரு பாக்கியம். அந்த தொடர்பை ஏற்படுத்த விரும்புகின்ற கௌரவ உறுப்பினர் மாஹிர் அவர்களுக்கு இந்த சபை நன்றி கூறியதாக இந்தத் தொடர்பை வலுப்படுத்துவதற்கு இந்த சபையினால் எல்லா முயற்சிகளும் எடுப்போம் என்ற உறுதி மொழியோடு We Will accept உத்தியோக பூர்வமாக We will Write.

**கௌரவ உறுப்பினர் A.அச்சி முஹம்மட்**

கௌரவ தவிசாளர் அவர்களே, கௌரவ உறுப்பினர் மாஹிர் அவர்கள் கூறியதைக் கேட்டால் அந்த நாட்டுக்குப் போனவர்களைத் தவிர அந்த நாட்டுக்குப் போகாதவர்களை போகக்கூடிய சந்தர்ப்பத்தை அமைத்துத்தந்தால் நன்றாக இருக்கும்.

**கௌரவஉப தவிசாளர் V.ஜெயச்சந்திரன்**

கௌரவ தவிசாளர் அவர்களே, 01 வது எமது சம்மாந்துறை பிரதேச செயலக பிரிவில் 51 கிராம சேவகர் பிரிவுகள் இருக்கின்றன. அதில் நாம் 10 பிரதேசங்கள் வட்டாரங்களாக பிரிக்கப்பட்டு இதற்குள் 51 கிராம சேவகர் பிரிவு இருக்கின்றது. ஒரு கிராம சேவகர் பிரிவிற்கு சாதாரணமாக ஒரு கிராம அபிவிருத்தி சங்கங்கள் அமைக்கப்பட்டு அதனூடாக பிரதேச செயலகத்தின் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றது.

அதனைப் போன்று எங்களது சபையின் நடவடிக்கைகள் ஒவ்வொரு கிராம சேவகர் ஊடாக முன்னெடுத்துச் செல்வதற்கு சனசமூக நிலையங்கள் கட்டாயம் இன்றியமையாதது. அது முழுமையாக அமைக்கப்பட வேண்டும். ஆனால் எமது சம்மாந்துறையைப் பொறுத்தளவிலே 16 சனசமூக நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மீதி கிராம சேவகர் பிரிவுகளிலே அமைக்கப்படவில்லை.ஏனைய கிராம சேவகர் பிரிவுகளிலும் எமது வட்டாரங்களின் பிரதி நிதிகளின் தலைமையில் சனசமூக நிலையங்கள் அமைக்கப்பட வேண்டும்என்பதுஎனது முதலாவது முன்மொழிவாகும்.

**எமது பிரதேசத்தில் உள்ள அனைத்து முச்சக்கர வண்டி சங்கங்களையும், தரிப்பிடங்களையும் பதிவு செய்தல்:**

அதிகமான நகர சபைகள் அல்லது மாநகர சபைகளில் முச்சக்கர வண்டி சங்கங்கள் பதிவு செய்யப்படுகின். ஆனால் எமக்கு அதற்கான சந்தப்பம் இல்லை. இது சம்பந்தமாக நான் பிரதேச செயலகத்திற்கு தொடர்பு கொண்டு அவர்களிடம் சங்கங்களை பதிவு செய்து தாருங்கள் என்று கேட்டபோது,அவர்கள் இது எங்களுக்கு பதிய முடியாது என்று சொல்லிவிட்டார்கள். அதனைப் போன்று கடந்த காலங்களில் சபையின் செயலாளர்களை தொடர்பு கொண்டு இதனைப் பதிவு

செய்து தாருங்கள் என்று கேட்ட போது அவர்களும் இதற்கு ஏற்பாடுகள் இல்லை. இது மாகாண சபைக்குச் செல்ல வேண்டும் என்று சொன்னார்கள்.

ஆகவே, இது சம்பந்தமாக கிழக்கு மாகாண போக்கு வரத்தது அதிகார சபைக்குச் சென்று அங்கே இருக்கும் அதிகாரிகளை வினவிய போது, அவர்கள் கூறிய விடயம் என்னவென்றால் கிழக்கு மாகாண போக்கு வரத்து அதிகார சபைக்கு முச்சக்கர வண்டி சங்கங்களை பதிவதற்கு அதிகாரம் எங்களுக்கு இல்லை. ஆனால் நாங்கள் தனிப்பட்ட வகையிலே வண்டிகளை பதிவதற்கு அது மாத்திரமல்ல அவர்கள் ஹயருக்கு ஓடுவதற்கு பதிவு செய்து தருவோமே தவிர மட்டுமன்றி எங்களால் பதிவு செய்ய முடியாது. வெகு விரைவிலே எங்களால் முச்சக்கர வண்டிகளுக்கு மீட்டர் பூட்டுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும். இதை எங்களால் பதிவு செய்ய முடியாது என்று கூறிவிட்டார்கள்.

ஆகவே, எமது சபை பிரதேசத்திற்குள்ளே அதற்கு ஒரு ஏற்பாட்டிற்கு பிரதேச சபையில் பதிவு செய்ய வேண்டும். தரிப்பிடங்களை பதிவு செய்து வண்டி ஹயர் செல்பவர்களுக்கு பிணக்குகள் வருகின்றது. அந்த பிணக்குகளை ஒரு முடிவுக்கு கொண்டு செல்வது சிறப்பு என கருதுகின்றேன்.

**1980 ஆண்டளவில் இயங்கி வந்த மல்வத்தை வாராந்த சந்தையை மீள இயங்கச் செய்தல்:**
1980 ஆம் ஆண்டளவிலே எங்களது மல்வத்தை பிரதேசத்திலே வாராந்த சந்தை இயங்கி வந்தது அதே போன்று மல்வத்தைச் சந்தி ஒரு பட்டனமாக இருந்த ஒரு பிரதேசம். 1989 ஆம் ஆண்டு காலத்தில் ஏற்பட்ட யுத்தம், அதனோடு இணைந்த கலவர சூழ்நிலையினால் அது முற்று முழுதாக அழிந்து விட்டது. தற்போது எனது ஏற்பாட்டினால் கடைத் தொகுதிகளுக்குப் பின்னால் ஒரு சந்தை கட்டடத் தொகுதி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அந்த சந்தைக் கட்டத்தை எமது பிரதேச சபை ஏற்பாட்டுடன் ஒரு வாராந்த சந்தையாக ஒரு நாளைத் தெரிவு செய்து இயக்க வேண்டும்.அதற்கு இந்த சபையின் அங்கீகாரம் வேண்டும்.

**மல்வத்தை ஆரம்ப வைத்திய சாலை பிரதேச வைத்திய சாலையாக தரம் உயர்த்துதல்.**

**பழைய வளத்தாப்பிட்டி கிராம மக்களின் தேவைகளை நிறைவு செய்யும் முகமாக வழத்தாப்பிட்டி கிராமத்திற்கென தனியானதோர் சனசமூக நிலைய நிர்வாகம் ஒன்றை அமைத்தல்:**
எமது வளத்தாப்பிட்டி பிரதேசமானது 1000 க்கு மேற்பட்ட குடும்பங்களைக் கொண்ட கிராம சேவைப்பிரிவாகும் 03 கிராமங்களை உள்ளடக்கியது. இஸ்மாயில் புரம், புதிய வளத்தாப்பிட்டிக் கிராமம், பழய வளத்தாப்பிட்டிக் கிராமம். இதில் இஸ்மாயில் புரத்திற்கு அல் உசைனி சனசமூக நிலையம் அமைக்கப்பட்டு இயங்கிக் கொண்டிருக்கின்றது. புதிய வழத்தாப்பிட்டிக்கு நாவலர் சனசமூக நிலையம் அமைக்கப்பட்டு இயங்கிக் கொண்டிருக்கின்றது. ஆகவே, பழைய வளத்தாப்பிடடிக் கிராமமானது 378 குடும்பங்களைக் கொண்ட ஒரு கிராம சேவகர் பிரிவு. அங்கே சனசமூக நிலையம் விசேடமாகத் தேவை. அதற்கான அங்கீகாரத்தை சபையிடம் நான் கோருகின்றேன்.

**எமது வளத்தாப்பிட்டி மற்றும் மல்வத்தை பொது மயானங்களில் மரணச்சடங்குகளை நிறைவேற்ற திறந்தவெளி மண்டபங்கள் அமைத்தல்:**
சாதாரணமாக எங்களது மயான பிரதேசங்கள் காடுகளை அண்டியதாக அமைந்திருக்கின்றது. மக்கள் அங்கே சென்று மரணச் சடங்குகளை நிகழ்த்துகின்ற போது மழை வந்தால் நாங்கள் மழைக்குள் அகப்பட்டு மிகவும் சிரமத்துக்குள்ளாகின்றோம். நாங்கள் மரங்களின் கீழ் ஒதுங்கினாலும் அந்த மரணப் பிரரேதங்கள் மழையில் நனைகின்ற சந்தப்பங்களுக்கு நாங்கள் அதிகமாக முகம் கொடுக்கின்றோம். இது சபையின் ஏற்பாட்டின் கீழ் குறைந்தது 500,000ரூபாவிற்கு ஒரு தற்காலிக திறந்த வெளி மண்டபம் அமைப்பதற்கு சபை ஒரு ஏற்பாடு செய்து தரவேண்டும் என்று நான் தயவாய்க் கேட்டுக் கொள்கின்றேன்.

**வனஜீவராசிகள் பாதுகாப்பு வலய அலுவலகமாக பயன்படுத்துகின்ற பழைய வளத்தாப்பிட்டி பிள்ளையார் கோவில் முன்பாக அமைந்துள்ள வளத்தாப்பிட்டி பொது கட்டடத்தை பொது மக்கள் பாவனைக்காக மீளக் கோருதல்:**

2013 ஆம் ஆண்டளவிலே வளத்தாப்பிட்டியில் யானை அடித்து ஒருவர் மரணமடைந்தார். அந்த சந்தப்பத்திலே மக்கள் ஒரு ஆர்ப்பாட்டம் செய்தார்கள். அந்த ஆர்ப்பாட்டத்திற்கு விடையாக வளத்தாப்பிட்டியில் ஒரு தற்காலிகமாகமான வனஜீவராசிகள் பாதுகாப்பு வலய அலுவலகம் அமைப்பதற்காக தீர்மானிக்கப்பட்டு, அந்த சந்தப்பத்திலே வளத்தாப்பிடியில் இருந்து சபைக்குச் சொந்தமான, எமது கிராமத்துக்குச் சொந்தமான ஒரு பொதுக் கட்டடம் வழங்கப்பட்டது. அந்தக் கட்டடம் வளத்தாப்பிட்டி குளத்து வீதியில் இருக்கும் பிள்ளையார் கோயிலுக்கு முன்பாக இருந்தது.அதனை தற்காலிகமாக பெற்று அதனைக் கட்டம் கட்டமாக அபிவிருத்தி செய்து தற்போது வேலி அமைத்து பிரதேச செயலாளரிடம் அதற்கான சேவையர் பிலேன் முதல் கொண்டு வனஜீவராசி திணைக்களத்திற்கு உரிமை கோரும் அடிப்படையிலே Rendition Formகளை சமர்ப்பித்துள்ளார்கள். அதனை அவர்கள் செயற்படுத்துவதற்கு இதனை மக்கள் கொண்டு சென்ற வேளை இது உங்களுக்கு சொந்தமில்லை. தரமாட்டோம். இது அரசாங்க அதிபரிடம் பெற்றுக் கொண்டோம் என்று அவர்கள் எதிரப்புத் தெரிவித்துக் கொண்டிருக்கின்றார்கள். இது சம்பந்தமாக அண்மையில் இளைஞர்கள் பேசி கலவரம் கூட ஏற்பட்டது. தற்போது அந்த வழக்கு சென்று கொண்டிருக்கின்றது.ஆகவே இது எமக்குச் சொந்தமான கட்டடம். இந்தக் கட்டடத்தை பிரதேச சபையின் பொறுப்பில் பெற ஏற்பாடு செய்ய எனது முன்மொழிவினை நான் வைக்கின்றேன்.

**தீர்மானம் 21**

| | | | |
|---|---|---|---|
| பிரேரித்தவர் | : | கௌரவ உப தவிசாளர் | வீ.ஜெயச்சந்திரன் |
| ஆமோதித்தவர் | : | கௌரவ உறுப்பினர் | ஆர். வளர்மதி |

**கௌரவ தவிசாளர்அவர்கள்:**

முதலாவதும் இரண்டாவதும், சபை உறுப்பினர்களின் தலைமையில் என்ற சொற்பாவனைக்கு நாம் போக முடியாது. ஏனென்றால் சன சமூனக நிலையங்கள் அமைக்கப்பட வேண்டும்.சபை உறுப்பினர்கள் அதை ஊக்குவித்து செய்யலாம். ஆனால் சபை உறுப்பினர்கள் என்று வந்த உடனே Conflict of Intreste வரும். நீங்கள் முன்னின்று உருவாக்கலாம். அதற்கு வட்டாரத்துக்குள் வருகின்ற சனசமூக நிலையங்கள் ஒரு Cluster ஆக வரும்.அதற்கு நீங்கள் தான் தலைமைத்துவம் தாங்குவீர்கள் ஆனால் சனசமூக நிலையங்களுக்கு உறுப்பினர்களின் தலைமைத்துவத்தில் இயங்கினால் Conflict of interestஎட்டும்.

**கௌரவஉப தவிசாளர் V.ஜெயச்சந்திரன்**

கௌரவ தவிசாளர் அவர்களே இங்கு நான் குறிப்பிட்டுள்ள விடயம் என்னவென்றால் பொதுக்கூட்டம் வைத்து ஒவ்வொரு கிராம சேவகர் பிரிவுகளிளும் சனசமூக நிலையம் அமைக்கப்பட வேண்டும். அவ்வாறான பொதுக் கூட்டங்கள் எங்களது தலைமையில் கலந்து கொண்டால் நாங்கள் அந்த நிர்வாகத்திற்கு

**கௌரவ தவிசாளர்அவர்கள்:**

நிச்சயமாக அது CDO வின் ஏற்பாட்டில் அங்கத்தவர்களின் பங்களிப்புடன் இது நடாத்தப்பட வேண்டும். மல்வத்தை வாராந்தச் சந்தை எப்படியும் அது முதலில் Proposal செய்தது அது உங்களது தலைமையில் அதனைச் செய்ய வேண்டும். ஏனென்றால் அவ்விடத்தில் இருந்துதான் அதனைச் செய்ய வேண்டும்.

வனஜீவராசிகள் இதில் அந்தக் கட்டடங்கள் உண்மையாகப் பார்த்தால் ஒருவருக்கும் சொந்தமில்லை. சபைக்கும் சொந்தமில்லை, பிரதேச செயலகத்திற்கும் சொந்தமில்லை. ஒரு

காலத்தில் மர்ஹூம் MHM. அஸ்ரப் அவர்களின் கடைசி கால நடவடிக்கைகளில் கட்டுப்பட்ட கட்டடங்கள். பல இடங்களில், வளத்தாப்பிட்டி மல்வத்தையில் ஒருவருக்கும் சொந்தமில்லை. தற்போது நமது கொச்சிக்காத்தூளார சந்தியிலையும் அந்தப் பிரச்சினை இருக்கிறது. அது மார்கட் என்ற படியால் நமக்கென்று இருக்கும். ஆனால் உத்தியோக பூர்வமாக எவருக்கும் கொடுக்கப்படவில்லை. அதற்குரிய எந்த Documentationஉம் இல்லை. ஆனால் நீங்கள் கூறியது போன்று நமக்குரியது என்று எடுத்துக் கொண்டு போய்த்தான் ஏனென்றால் அதில் பல சிக்கல் இருக்கின்றது. இவ்விடயத்தில் Post office என்ற பேருக்கு Post Office இருக்கின்றது. அந்தப் பெயரில் இருக்கின்ற Post office வேறு எங்கேயோ இயங்கிக் கொண்டிருக்கின்றது. ஆனால் அந்தக் கட்டடம் Post master General க்கு கொடுக்கவும் இல்லை ஆனால் பிரதேச செயலகத்திற்கு பாரமும் இல்லை.நமக்குத் தரவும் இல்லை. அதனை உள்வாங்கியதாக நாம் நமது நடவடிக்கையினை மேற்கொள்வோம்.

**கௌரவ உறுப்பினர் A.அச்சி முஹம்மட்**

அன்மையில் சண்முகா வித்தியாலயத்தில் இடம் பெற்ற சம்பவம் மேலும் நடைபெறாது இருக்க இதற்கான இரு சமூகங்களுக்கும் இடையிலான உறவு பாலத்தை ஏற்படுத்த இது சம்பந்தமாக சபையின் ஆலோசனை செய்ய இடம் ஒதுக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

மேலும் நான் ஒரு சமாதானக் கல்வி இனைப்பாளர் என்ற வகையில் இது வரையிலும் நமது சபை இன ஒற்றுதையைக் கட்டி எழுப்பியது போல் தொடரவேண்டும் என நினைக்கின்றேன்.

கௌரவ தவிசாளர் அவர்களே,தமிழ் மக்கள் போராட்டத்திலே வைத்த வட்டுக் கோட்டை தீர்மானத்தில் 1972 ஆம் ஆண்டு மே 14 ஆம் திகதி தமிழர் விடுதலை பிரச்சினைக்குத் தீர்வாக 06 அம்ச கோரிக்கையை வைத்தனர். அதற்கமைய இரண்டாவது கோரிக்கை, இலங்கை மத சார்பற்ற அரசாக பிரகடனப்படுத்தப்பட்டு, எல்லா மதங்களும் சமமாக பேணி வளர்க்க வேண்டும் என்பதுதான். இது இப்படி இருக்க தமிழ் மொழி ஒன்றாக இருந்தாலும் உள்ளத்தில் விசம் இருந்தால் வேற்றுமை எனும் உணர்வுகள் கலந்து வருவது சாதாரணமாகிவிடும்.

மதத்தால் வேறுபட்டிருந்தாலும் ஒரு மொழியைப் பேசி ஒன்று பட்டு வாழும் இரண்டு சிறுபான்மை இனங்களும் குரோதங்களை உருவாக்கி இவை தங்களைத் தீண்டுவதற்கு சில தீய சக்கி முயற்சிக்கின்றது. இது ஸ்ரீ சண்முகா வித்தியாலைய பாடசாலை அதிபர் முஸ்லிம் ஆசிரியர்களின் ஆடை ஹபாயா விடயத்தில் எதிர்ப்பைக் காட்டவும், விமர்சனத்தைச் செய்யவும் மக்களைக் கூட்டி ஆர்ப்பாட்டத்தை நடாத்துவதற்கும் தூண்டியிருக்கின்றார். உலகில் கல்வி மான்களையும் அறிவாளிகளையும் உற்பத்தி செய்யும் இடம் கல்விக் கூடங்களே. இனவாதமும் சக மனிதனின் அடிப்படை மனித உரிமை மீறலும் நடப்பதாக இருந்தால் நம் நாடு எங்கே போவிடும். ஒரே தாய்மொழி பேசும் சகோதர இணங்களுக்குள்ளே ஒற்றுமையில் விரிசல். எதிர்கால சந்ததியினரை எங்கே கொண்டு சேர்க்கப்போகிறது. பெண்கள் ஆடை அணிவதை இஸ்லாம் போதித்துள்ளது. தெளிவாக முஸ்லீம் பெண்களது ஆடை விவகாரத்தில் 2014 ஆம் ஆண்டு கொழும்பு ராஜகிரிய ஜனாதிபதி பாளிகா வித்தியாலயத்தில் நடந்த ஒரு சம்பவம் கருத்தில் கொண்டு, உயர் நீதி மன்ற நீதியரசர் மொஹான் பீரிஸ் தலைமையிலான நீதியரசர் குழு ஏற்கனவே முழு நாட்டுக்கும் பொதுவான அடிப்படை உரிமை மீறல் வழக்கில் தீர்பை வழங்கியிருக்கின்றது. ஸ்ரீ சண்முகா வித்தியாலைய பாடசாலை அதிபருக்கு ஏன் இந்த விடயம் தெரியவில்லை?

திருகோண மலை மாவட்டத்தில் கந்தளாய் அக்கராபோதிய வித்தியாலயத்தில் அதிபராக இருக்கின்ற பௌத்த மத குரு அங்கு கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு தங்களது மேனியை மறைப்பதற்கு அனுமதி அளித்துள்ளார். அதே போல் திருகோணமலை மாவட்டத்தில் உள்ள வித்தியாலோக சிங்கள மகாவித்தியாலயத்தில் முஸ்லீம்களின் ஆடைகளை களட்டி விட்டுத்தான் சண்முகா வித்தியாலயத்திலிருந்து செல்கின்றார்கள்.அதில் மாணவர்களின் தற்காலிக கல்விக்கு இடைஞ்சலாக இருக்கக்கூடாது என்பதற்காக அதை மாணவர்கள் ஏற்றுக் கொண்ட ஒரு விடயம்.

1980 காலப்பிரிவிலே முஸ்லீம்கள் மாணவர்களுக்கு கால் சட்டையும் தலையை மூடுவதற்கு மொக்காடுகளும் அணிய ஏற்ற வகையில் அரசாங்கம் சுற்று நிருபங்கள் அனுப்பியிருந்தது.

2014 நாவலர் ராஜகிரிய மகாவித்தியாலய மகஜன கல்லூரியில் ஜனாதிபதிமகளிர் கல்லூரியின் மாணவியின் பிரச்சினையை உயர் நீதி மன்றம் 97/2014 ஆம் தீர்பின் படி மாணவிகளின் கலாசார உடை அணிவதற்கான தடை நீக்கப்பட்டது. இவ்வாறான இன்னுமொரு வழக்கு 688/ 2012 தீர்ப்புமாணவிகளின் மார்க்கத்துக்குதடையாக இருக்கக் கூடாது என்று உடை அணியலாம். என்ற தீர்ப்பு உள்ளது. எனவே நமது பிரதேச சபை இது தொடர்பான 37/95 ஆம் இலக்க சுற்று நிருபத்தை மீண்டும் அனுப்பி வைக்க நடவடிக்கை மேற் கொள்ள வேண்டும் என்று கல்வி அமைச்சுக்கு ஒரு மகஜர் சமர்ப்பிக்க வேண்டும். அது மட்டுமல்லாது தமிழர் கலாச்சாரத்தில் பொட்டு வைப்பது பொட்டு வைத்தாலே சிலருக்கு அலேஜிக். இந்தப் பொட்டு வைப்பது விஞ்ஞான ரீதியாக அவர்கள் விளக்கம் தருவார்களோ என்னமோ தெரியாது. நான் விளக்கம் அளிக்க தயாராக இருக்கின்றேன். தமிழ் மக்கள் வணங்குவது தலையில் வைத்து வணங்குவது, நெஞ்சில் வைத்து வணங்குவது, அடி வயிற்றில் வைத்து வணங்குவது, தலைக்கு மேலே வைத்து வணங்குவது, கீழே விழுந்து வணங்குவது, அத்தனை வணக்கங்களுக்கும் ஒவ்வொரு அர்த்தத்தோட வணங்குகின்ற ஒரு உண்ணதமான இந்து மதத்தில் இருப்பவர்கள் இப்படிான ஒரு மாற்று மதத்தில் அதை நாங்கள் அறிந்தவர்களாக இருக்கின்றோம்.

அதுமட்டுமல்ல மாகாண சபை தற்போதைய புதிய பிரதேச சபையில் காலி மாவட்டத்தில் தமிழ் மொழி பேச வேண்டும். என்று ஒரு முஸ்லீம் உறுப்பினர்தான் காலி பிரதேச சபையில் குறிப்பிட்டிருக்கிறார். அது மட்டுமல்ல ஒரு கோயிலில் ஒவ்வொரு கோயில் கதவும் திறக்கும் போது ஒவ்வொரு சாமியும் வலம் வரும் போதும் என்ன வாயு பிரயோகிப்தென்பது உங்களால் கூற முடியுமோ தெரியாது எங்களால் கூற முடியும். அவ்வளவு கற்றிருந்திருக்கின்றோம். உங்களுக்கு இவர்கள் விளக்கம் கூறுவார்களோ என்னமோ தெரியாது, சிவராத்திரி இருந்தால் எந்தக் கோயிலுக்குச் சென்று வழிபட வேண்டும் எந்தக் கோயில் சரியான அர்ச்சனையை வழங்க வேண்டும். என்ற சரியான தீர்மானம் மற்ற நெறிமுறைகளைக் கொண்ட முக்கோடி ஆண்டுகளுக்கு முன் தோன்றப்பட்ட ஒரு மதமாக இருக்கின்ற இந்து மதம் இன்னும் நிலைத்து நிற்பதற்கு காரணம் அதில் இருக்கும் நல்ல விழுமியங்கள் தான். அதில் இருக்கின்றவைகளைக் கடைப்பிடித்து நாங்கள் எந்த வேலைகளையும் செய்கின்ற போது இந்து மதத்திற்கு கௌரவம் அளித்து வாழ்கின்றோம்.

இப்படிப்பட்ட நிலையில் இந்த ஹபாயா விடயத்தில் ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்ட தீர்ப்பு அவர்கள் முரண்பட்ட காரணத்திற்காக என்று கூறி அவர்களுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டிருக்கின்றது. இது மன வேதனைக்குரிய விடயம். அது மட்டுமல்ல நாங்கள் எங்களது பிரதேசத்தைப் பொறுத்தவரையில் எங்களுக்குள் அந்தப் பிரிவினை கிடையாது. நான் ஒரு நாளும் கௌரவ உறுப்பினர் கோவிந்த சாமியை ஒரு வேற்று மதத்தவர் என்று நினைத்ததே கிடையாது. அதே போல் எங்களுக்கு எத்தனையோ தமிழ் பிரதேச மக்கள் இருக்கின்றார்கள். ஒரு தாய் எல்லா மக்களையும் பெற முடியாது. ஆகவே நாங்கள் உங்களை இந்து மக்களை என்றுமே எங்களது உடன் பிறவாத சகோததர்களாகவே நினைத்துக் கொண்டிருக்கின்றோம். எனவே இதற்குள் இருக்கின்ற நீங்களும் கூட ஒத்துழைப்பை வழங்கி மேலும் இப்படியான விரிசல்கள், பாடசாலைகள், கல்வி கூடங்களிலும் இந்த நடவடிக்கைகள் நடக்கக்கூடாது சகல மதங்களுக்கும் உரிய ஆடைகளைப் பின்பற்ற வேண்டும். என்ற விடயத்தில் நீங்கள் கருத்துக்களை வழங்க வேண்டும். என்று இந்த சபையை நான் தாழ்மையுடன் வேண்டிக் கொண்டு விடைபெறுகின்றேன்.

ஒரு சின்ன விடயத்தை தெரிவித்துக் கொள்கின்றேன், உங்களது கோயில் மணியோசையும் என்ன நாதத்தை எழுப்பி, அது உங்களுக்கு என்ன உணர்வை ஊட்டுகின்றது என்பதையும் அறிந்தவனாக இந்த சபையில் உங்களது ஒத்துளைப்பை வேண்டி முடிக்கின்றேன்.

**தீர்மானம் 22**

அண்மையில் சண்முகா வித்தியாலயத்தில் இடம் பெற்ற சம்பவம் மேலும் நடைபெறாது இருக்க இதற்கான இரு சமூகங்களுக்கும் இடையிலான உறவு பாலத்தை ஏற்படுத்த இது சம்பந்தமாக சபையின் ஆலோசனை செய்ய இடம் ஒதுக்குவதற்கும், இதுவரையும் நமது சபை இன ஒற்றுமையை கட்டியெழுப்பியது போல் அதனை தொடர்ந்து செயற்படுத்துவதற்கும் சபை ஏக மனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.அச்சி முஹம்மட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | என். கோவிந்த சாமி |

**கௌரவ தவிசாளர்அவர்கள்:**

கௌரவ அச்சிமுஹம்மட் அவர்கள் அவருக்கு உரித்தான பாணியில் அந்தக் கருத்துக்களை முன்வைத்தார். இந்த இனங்களுக்கு அல்லது தனிப்பட்ட சம்பவங்கள் இனங்களுக்கு இடையிலான கருத்து முரண்பாடு வரக்கூடிய முறையில் நாம் அதை நோக்குவது பிழை. ஏனென்றால் இந்த ஊர் அதற்கு உதாரணம். இன்றைக்கு வீரமுனை RKM பாடசாலையிலையோ எந்த தமிழ் பாடசாலையிலையும் முஸ்லிம் ஆசிரியர்கள் பர்தாவோட போவதற்கு எந்தத் தடையும் இல்லை. அதே மாதிரி தமிழ் ஆசிரியர்கள் சாறியோடோ, பொட்டோடோ, பூவோடோ வாருவதற்கும் எந்தத்தடையும் இல்லை. இது ஒரு ஆசிரியர், ஒரு அதிபர் அந்த முடிவு எடுத்து இந்த இரண்டு இணங்களுக்கும் இடையிலான ஒரு சந்தேக நிலையை உருவாக்கியிருக்கிறது. அதைக் கண்டிக்க வேண்டும்.

ஏனென்றால் இந்தப்பகுதியில் தமிழ் பேசிய மக்களாக நாம் பிண்ணிப்பினைந்து வாழ்பவர்கள். ஒவ்வொரு மதத்திலும் கலாசாரங்களை உள்வாங்கியவர்களாக அவர் கூறியது போல் எந்த முரண்பாடும் இல்லாமல் வாழ்ந்து வரும் நாம் இப்படியான நிகழ்வுகள் இனிமேலும் நடக்கக்கூடாது. அப்படியாக நடப்பதை இந்த மாகாணத்தின் கல்வி அதிகாரிகள் தடுக்க வேண்டும். என்ற ஒரு பொதுவாகன தீர்மானத்தை நாம் எடுக்கலாம்.ஆனால் இந்த நிகழ்வு ஒட்டு மொத்தமாக தமிழ் மக்களின் கருத்தாக கருதப்படக்கூடாது என்பது எனது தாழ்மையான கருத்து.

**கௌரவ உறுப்பினர் ஏ.எம்.எம். றியாஸ்**

பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ஹீம், கௌரவ தவிசாளர் அவர்களே, என்னால் சபைக்கு 02 பிரேரனைகள் முன் வைக்கப்பட்டிருக்கின்றன.

**மகளிர் சந்தை மற்றும் பொழுது போக்கு பூங்கா திட்ட வரைபைத் தங்களின் மேலான கவனத்திறிகு இத்தால் சமர்ப்பிக்கின்றேன்.**

எமது ஊரின் பாரம் பரியம் தாங்கள் அறிந்த விடயம் இந்த உயர் சபையினரும் அறிந்த விடயம். எமது ஊரின் பாரம்பரியத்தில் எமது ஆலையடிச் சந்தை என்பது மிகவும் தொன்மையான ஓர் பழமை வாய்ந்த ஒரு பிரதேசம். அந்தப் பிரதேசம் இப்போது இருட்டடைந்து பாழடைந்து காணப்படுகின்றன. அந்த இடத்தில் எமது சம்மாந்துறைக்குச் சொந்தமான ஆலையடிச் சந்தைக் கட்டடத்தில் மகளிர் சந்தை மற்றும் பொழுது போக்கு பூங்கா திட்ட வரைபை சமர்ப்பிக்கின்றேன். மேற்படி விடயம் தொடர்பான கோரிக்கைகள் மற்றும் திட்ட வரைபடங்கள் தங்களின் மேலான கவனத்திற்கு இத்தால் சமர்ப்பிக்கின்றேன். தயவு செய்து இவ்விடயம் தொடர்பாக தாங்கள் உடனடியாக கவனம் செலுத்தி பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொண்டு தருமாறு தங்களையும் உயர் சபையையும் வேண்டுகின்றேன்.

**மற்றும் வாசகர் மத்திய நிலையம் மற்றும் அபகாஸ் நிலையம் திறத்தல்:**

சம்மாந்துறை 1 ஆம் குறுக்குத் தெருவில் அமைந்துள்ளபல் நோக்கு கூட்டுறவு சங்கத்தின் கட்டடத்தில் வாசகர் மத்திய நிலையம் மற்றும் அபகாஸ் நலையம் திறப்பதற்கான கோரிக்கை ஒன்றை இத்தால் மேலான சபைக்கு சமர்ப்பிக்கின்றேன். தயவு செய்து உரிய விடயம் தொடர்பாக தாங்கள் உடனடியாக கவனம் செலுத்தி, பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொண்டு

தருமாறு தங்களையும் உயர் சபையையும் வேண்டிக்கொள்கின்றேன். அத்துடன் எமது மட்டுப்படுத்தப்பட்ட பல் நோக்கு கூட்டுறவு சங்கத்திற்கு என்னால் அனுப்பபபட்ட கிளை சம்பந்தமான கடிதத்திற்கு எனக்கு பதில் கடிதம் ஒன்று அனுப்பி வைத்திருக்கிறார்கள்.
AM.றியாஸ் பிரதேச சபை உறுப்பினர் சம்மாந்துறை SP 06 கிளையினை அபகாஸ் நிலைய பாவனைக்காக கோரல் என்ற தலைப்பிட்ட கடிதத்திற்கு அமைவாக,

மேற்படி தாங்கள் 2018.04.17 ஆம் திகதி அனுப்பி வைத்த கடிதம் சார்பாக தெரியப்படுத்துவதாவது எங்களது சங்கம் SP 06 கட்டடத்தை AM.நபீஸ் என்பவருக்கு வாடகை அடிப்படையில் ஈகாஸ் பாடசாலை நடாத்துவதற்கு 2017.08.26 ஆம் திகதி கடிதம் மூலம் கேட்டதற்கு அமைவாக 2018.04.25 ஆம் திகதி இடம் பெற்ற இயக்குனர் சபைக் கூட்டத்தில் AM.நபீஸ் அவர்களின் கடிதம் ஆராயப்பட்டு அவருக்கே SP 06 கிளையை வாடகைக்கு வழங்குவதாக தீர்மானித்து. ஒப்பந்தம் செய்யும் தருவாயில் உள்ளது. எனவே AM.நபீஸ் அவர்களுக்கு வாடகைக்கு வழங்குவதற்கு தீர்மானித்ததன் காரணத்தினால் தங்களுக்கு SP கிளை 06 னை வழங்க முடியாது என்பதனை மனவருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கின்றேன். என்று கூறி எனக்கு ஒரு கடிதம் அனுப்பிஇருக்கிறார்கள்.

இதில் என்னவென்றால் கௌரவ தவிசாளர் அவர்களே, நான் அனுப்பிய கடிதம் 2018.04.17 ஆம் திகதிய கடிதம்.இவர்களுடைய இயக்குனர் சபை தீர்மானித்திருக்கின்றது. 2018.04.25 ஆம் திகதி எனக்கு கடிதம் கிடைக்கப் பெற்று ஏறத்தாள 08 நாட்களுக்குப் பின்னர் இந்த சபைத் தீர்மானம் எடுத்திருக்காங்க. நான் கேட்டது எமது சபைக்கூடாக சபையின் பராமரிப்பின் மூலமாக அந்த SP 06 கிளையினை எடுத்து அபகாஸ் நிலையமும் மற்றும் சிறுவர்களுக்கான ஒரு விளையாட்டு உபகரணங்கள் பொருத்தி அந்த பிரதேச மக்கள் அபிவிருத்திக்காக அறிவு பூர்வமான வளர்ச்சிக்காக அந்த இடத்தை எடுத்து நடாத்துவோம் என்று தீர்மானித்தேன். எனக்கு அனுப்பிய கடிதத்தின் பிரகாரம் அவர்கள் தர முடியாடியாது என்று அறிவித்திருக்கின்றார்கள். எனவே இது சம்பந்தமாக எனக்கு நல்ல முடிவினை இந்த உயர் சபையின் மூலமாக பெற்றுத் தருமாறு வேண்டுகின்றேன்.

**தீர்மானம் 23**

சம்மாந்துறை பிரதேச சபைக்குச் சொந்தமான ஆலையடிச் சந்தை கட்டடத்தில் மகளிர் சந்தை மற்றும் பொழுது போக்கு பூங்கா திட்ட வரைபடத்தினை ஏற்றுக் ொள்வதற்கு சபை ஏக மனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.எம்.எம்.றியாஸ் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | கே.எல். சிஹாமா |

**கௌரவ தவிசாளர்அவர்கள்:**
இதில் இரண்டு விடயங்கள் ஒன்று பழைய மார்கட் அது பழைய கதை பல முடிவுகள் எடுத்திருக்கிறோம் ஆனால் அதனை செயற்படுத்தவில்லை 02 வது அபகஸ் சென்டர் அது இரண்டையும் இரண்டாகப் பார்த்து உங்கள் கருத்துக்களைத் தெரிவிக்கலாம்.
**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம்.மாஹிர் அவர்கள்:**
மன்னிக்கவும் கௌரவ தவிசாளர் அவர்களே, அபகஸ் சம்மந்தமாக எங்களுக்கு தரப்படாத Subject பற்றி கதைத்துக் கொண்டு நேரத்தை வீனடிக்காமல் எழுத்து மூலம் தந்தால் அடுத்த சபையில் நாங்கள் விவாதிக்கலாம்.

**கௌரவ உறுப்பினர் SM.முஸ்தபா**

கௌரவ தவிசாளர் அவர்களே,பழைய மார்கட் பற்றி நமது கனவு தற்போது மிக அவசரமான முறையில் I Project இன் கீழ் வீதி அபிவிருத்தி செய்யப்பட இருக்கின்றது. கானை உடைத்து கட்டுவது விடயம் தொடர்பாககுடியிருப்பாளர்களுடைய பொடுபோக்குத் தனத்தால் அது தாமதமாகின்றது. நான் அறிந்த மட்டில் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர், சம்மாந்துறை உயர் சபையான நம்பிக்கையாளர் சபைக்கும், மஜிலிஸ் அஸஊறாவுக்கும் அவர்களுடைய உதவியை நாடுவதற்காக ஒரு தீர்மானம் எடுத்திருக்கின்றார். குடியிருப்பாளர்களுடைய மதில் அகழ்வு நடைபெற்றால், அந்த வீதி அமைக்கப்படுமாக இருந்தால் நாம் ஒரு போதும். இருட்டடைந்த ஓரமாக இந்த ஆலையடிச் சந்தியை பேசுகின்ற தேவை ஏற்படாது. வீதி அபிவிருத்தி அடைந்தால் தானாகவே அந்தப் பிரதேசம் அபிவிருத்தி அடைவதற்கான கூடுதலான வாய்ப்பு இருக்கின்றது.

**கௌரவ உறுப்பினர் A.அச்சி முஹம்மட்:**

பழைய மார்க்கட், நம்து ஊர் சனத் தொகை கூடிய ஊர். எம்மை விட சனத்தொகை குறைந்த ஊரில் அதாவது நிந்தவூரில் அமைச்சர்களைக் கொண்டு ஒசுசல கொண்டு வந்திருக் கின்றார்கள். அதே போல் நமது ஊரிலும் அந்த இடத்தில் ஒரு ஒசுசல கொண்டு வந்தால் மக்களுக்கு உதவியாக இருக்கும். அவைகள் ஒரு தேவையான விடையங்கள்.

மற்றயது உறுப்பினர் அவர்கள் கூறியது போல், எனது வீட்டுக்கு முன் ஈகாஸ் இருந்தது. ஆனால் கடிதங்கள் முன்பின் வந்திருக்கலாம்.அதனைக் கேட்பதற்கு முதல் நபீஸ் என்பவர் மிக நீண்ட காலமாக சுமார் 03 மாதத்திற்கு மேல் சென்று அவர் அந்த அனுமதி எடுத்ததன் பின்னர்தான் அவர் சபையில் அதனைப் போடுக் கொடுத்திருக்க வேண்டும் என்று நான் நினைக்கின்றேன். ஏனென்றால், தனியாருக்கு திடீர் என்று வழங்க முடியாது. அது சம்பந்தமாக மிக நீண்டநாள் ஏதோ ஒரு வகையில் அதனை அபிவிருத்தி செய்ய வேண்டும் என்று நானும் கனவு கண்டுகொண்டிருந்தேன். அந்த விடயம் வரும் நேரத்தில் இப்படி நடந்திருக்கின்றது. அந்த சைட்ல வரும் பாதைகளைக் கூட சிலர் ஆக்கிரமிக்கின்றனர். அந்த நபருடனும் முரண்பட்டுக் கொண்டிருந்ததையும் நான் கண்டேன். எனவே நான் நினைக்கின்றேன், இந்தக்க கடிதம் சட்ட ரீதியாகிலும், மிக நீண்டகாலமாக இப்போஇருக்கின்ற இடத்தில் இருந்து எழும்பச் சொன்ன காலத்தில் இருந்து அதற்கு முயற்சி எடுத்துக் கொண்டிருக்கின்றார்.

முதல் நான் அதற்கு ஒதுக்கப்பட்ட காசியில் அந்தக் கட்டத்தை புனரமைத்து ஒரு கிளினிக் சென்டரயாவது கொண்டுவர வேண்டும் என்று நான் நினைத்தேன். எனவே இந்தத்திட்டம் மிகவும் ஒரு முக்கியமான திட்டம் தான்.அவ்வளவு மோசமாகக் கிடக்கின்ற ஒரு இடம். தனி நபரையும் கூப்பிட்டு அனுகி அது என்னமாதிரி நடந்தது என்று கேட்டு இந்தத்திட்டத்திற்கு முன்னுரிமை வழங்குவதில் நானும் உறுதுணையாக இருக்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம்.மாஹிர் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, பழைய மார்கட் சம்பந்தமாக அபிவிருத்தி செய்ய வேண்டும் என்பதில் எந்தக் கருத்து முரண்பாடும் இல்லை. ஏனென்றால் சம்மாந்துறையின் நாகரீகம் பிறந்த இடம்.அதன் தற்போதைய நிலையைப் பாக்கின்ற போது அது எல்லோருக்கும் மிக மனவருத்தமான தொன்று. அது அபிவிருத்தி செய்யப்பட வேண்டும். ஆனால் தற்போது அந்தக் கட்டடத்தை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கின்ற போக்குவரத்துச் சபை Work Shop அதனை எழும்பச் சொன்னால் எங்கள் ஊரில் இருக்கும் வளத்தை நாங்கள் இழக்கின்றோம். என்பதுதான் அர்த்தம்.அது வேறு ஊருக்குச் சென்று விடும்.கிழக்கு மாகாணத்தில் அந்த Work Shop சம்மாந்துறையில் மட்டும்தான் இருக்கின்றது. திடீர் என்று எழும்பச் சொன்னால் அவர்கள் இதே காரணத்தை வைத்தக் கொண்டு வேற ஊருக்கு கொண்டு போய்விடுவார்கள். ஆகவே அந்த Work Shop சம்மாந்துறையில் வேறொரு இடத்தில் Relocatசெய்வதற்கு ஏற்பாடு செய்ததற்கு பிறகுதான் அந்தக்கட்டடத்தை எங்கள் பயன்பாட்டுக்கு எடுக்க வேண்டும். என்பது என்னுடைய தயவான கோரிக்கையாகும்.

**கௌரவ தவிசாளர்அவர்கள்:**

இந்த விடயத்தில் இந்த Work Shopஏறத்தாள 15, 20 வருடங்களாக அவ்விடத்தில் இருக்கின்றது. நீங்க சொன்ன மாதிரி ஒரு ஆக்கிரமிப்புத்தான். அது இன்றைக்கு 3250 ரூபா தான் அதற்குரிய வாடகை 04 மாத கால வாடகை நிலுவையாக இருக்கின்றது. ஏறத்தாள 07 வருடத்திற்கு முதல் 2011 ஆம் ஆண்டு சபை உருவாகி உரிய காலத்திற்குள் இந்த தீர்மானம் எடுத்து அவர்களை அவ்விடத்தில் இருந்து வெளியேறச் சொல்லியும், அந்த இடம் புனரமைக்கப்பட வேண்டும் என்றும் அந்தக்காலத்தில் இருந்து இன்று வரையும் Relocateசெய்யும் முயற்சியில் எவரும் அக்கரை காட்டவில்லை. அந்தக்காணி சிலியேட்டுக்குப் பக்கத்தில் கொடுக்கப்பட்டும்.ஆனால் எதுவும் இல்லாமல் அது அவ்விடத்திலேயே இருக்கின்றது.

நான் 100 வீதம் ஏற்றுக் கொள்கின்றேன். நல்ல வளம் அவ்விடத்தில் இருக்கின்றது. அந்த வளம் அவ்விடத்தில் இருப்பதால் பல விதமான Complaints இரவுவேளைகளில் அவ்விடத்தில் நடக்கின்ற விடயங்கள், அதற்குள் இருக்கும் வாகனங்கள் பாவிக்கப்படுகின்ற முறை, எதற்க்காக பாவிக்கப்படுகின்றதென்றும் பல Complaints இப்போது அவர்களுக்கு Notice கொடுத்து 07 வருடங்கள் இன்னும் அந்த தஸ்தாவேஜ் இன்னும் அவங்க எந்த முயற்சியும் எடுக்கவில்லை.

இன்றய நிலையில் அந்த Work Shop அவ்விடத்திற்கு பொருத்தமில்லை. அந்த நேரம் அது ஊருக்கு நடுவில் அது பாதுகாப்பாக இருந்தது. இப்ப அவ்விடத்திற்க்கு பொருத்தமில்லை ஏனென்றால், அவங்களுக்கு அவ்விடத்தில் வாகனங்களைக் கொண்டு வந்து வைத்திருப்பதற்குரிய வளம் இல்லை. அவர்கள் இஞ்சின் அவைகளைத்தான் செய்து கொண்டிருக்கிறார்கள். அப்படியானால் அதற்கு இதை விட பெரிய இடம் வேண்டும். அப்படியான இடம் உருவாக்குவற்கு CTB என்னைப் பொறுத்தமட்டில் Capital Expenditure செய்யாது. அதில் நான் ஈடுபட்ட படியா அவர்கள் சொன்னார்கள்,நீங்கள் யாராவது கட்டடம் கடடித்தந்தால் நாங்கள் இடமாறலாம் என்று கூறியதன் காரணத்தால் தான் பின்வாங்கினோம். அது போய்விடும் போய்விடும் என்று இருந்ததால் அது போனதும் இல்லை மலர்ந்ததாகவும் இல்லை.இப்போது அதற்கு முன்னாலுள்ள கடைகள் எல்லாம் கௌரவ உறுப்பினரின் உற்சாகத்தில் ஆட்களைச் சேர்த்து இப்போதுஅனேக Riquest வந்திருகிறது. அந்த கடைகள் எல்லாவற்றையும் நாம் திருத்தி அவ்விடத்தினை உயிர்பிப்பு செய்வோம்.

அதே நேரம் அந்தப்பாதையின் நீளத்திற்கு பூனையாரின் கடையில் இருந்து மெகிஸ்டோர் வரும் வரையும் உள்ள கட்டடங்கள் சட்ட பூர்வமாக அகற்றப்பட வேண்டும். அவற்றின்Life span முடிந்து உன்மையாக அது பாதுகாப்பற்ற கட்டடங்களாக கருதலாம்.அதற்கு Engineer Opinion எடுத்து சபையால் நாம் அறிவித்தல் கொடுக்க வேண்டும். அவர்கள் அந்தக்கட்டங்கள உடைத்து அகற்றச் சொல்லி. அப்படியென்றால் அந்த ஏரியா மாறும். இந்த Work Shop ஒரு பிரச்சினை 07 வருடமா நாம் எதுவும் செய்து கொள்ள முடியாமல் உள்ளது.அது நமது ஊரின் வளம் என்று நினைத்து விட்டுவிடுகின்றோம். அதனை என்ன செய்வது என்பதுதான் ஒரு சவால்.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம்.மாஹிர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இந்த அரசாங்கத்தின் 100 நாள் வேலைத்திட்டத்தில் அந்த Work Shop பையும் CTB Depot வையும் ஏற்கனவே ஒதுக்கப்பட்ட அந்தக் காணியில் பல தேவைகளுக்கு அந்தக் காணியைப் பயன்படுத்தி மிஞ்சிப் போய் இருக்கின்ற ஒரு முக்கால் ஏக்கரில் அதனைShit பன்னுவதற்கு ஒரு Budget Estimate 07 கோடி ரூபா budget செய்யப்பட்டு 100 நாள் வேலைத்திட்டத்தில் உள் வாங்குவதற்குள் அந்த 100 நாள் திட்டம் முடிவடைந்து அரசாங்கமும் மாறி அமைச்சும் மாறிவிட்டது.

ஆகவே உங்கள் அரசியல் தொடர்புகளை வைத்து செய்ய முடியுமானால் அந்தக் காசை கொண்டுவந்து செய்யலாம். ஏனென்றால் City Planing ஆல் இந்த திட்டத்திற்கு காசி ஒதுக்க முடியாது. இல்லாவிட்டால் ஏற்கனவே நாங்கள் அதனை செய்திருப்போம். ஆகவே, வேறு

அமைச்சுக்களின் மூலம் காசு கொண்டுவர முடிந்தால், இரண்டு விடயத்தையும் நாங்கள் ஒரே இடத்தில் Shit பன்னலாம்.இந்த Depot வையும் Work Shop யும் ஒரு இடத்துக்கு கொண்டு போகலாம்.இதற்க்குத் தேவை 07 Million தான் அதற்குரிய Document எல்லாம் என்னிடம் இருக்கின்றது.

**கௌரவ உறுப்பினர் A.அச்சி முஹம்மட்:**

இது சம்பந்தமா நானும் கூறினேன். அவ்விடத்தில் Work Shop இருப்பதற்குத்தான்Siliate க்கு, VTCக்கு,TecnicalColliege மாணவர்கள் நேரடியா Practical க்கு போகலாம். ஜேர்மன் டெக்ல செய்வதுபோல் அவங்களுக்கு அதனை ஒரு பாடநெறியாகவைத்து அந்தப் பிள்கைளுக்கு பயிற்சி கொடுக்கலாம். 2 வது விடயம் நாங்கள் நமது காலத்தில் நமதுசபையினால் 10 இலட்சம் காசை ஒதுக்கினோம்.அதாவுள்ளாMinister ஐ பிடித்து 10 இலச்சம் காசி நாங்க ஒதக்கினோம். இப்போது நீங்கள் சொலும் அந்தத்திட்டத்தை கௌரவ அமைச்சர் நிமல் ஸ்ரீபாலடி சில்வா அவர்களிடம் பேசி அதைச் செய்யலாம். அப்படிச் செய்தால் அவர்களும் பாதிக்கப்படமாட்டார்கள்.அந்த Work Shop உம் போகக்கூடாது. கிழக்கு மாகாணத்தில் அது ஒன்றுதான் இருக்கிறது.

**கௌரவ தவிசாளர்அவர்கள்:**

இந்த முடிவை நாம் 02 ஆக எடுப்போம். ஒன்று தற்காலிகமாக பழைய Marketஇன் வெளியில் இருக்கும் கடைகளுக்குரிய திருத்த வேலைகளைச் செய்து அதனை வாடகைக்கு விடல்.அதனை ஒரு தீர்மானமாகவும். CTB Work Shopஇடமாற்றுவதற்கான மாற்று நடவடிக்கைக்காக கௌரவ போக்கு வரத்து அமைச்சரை அனுகி அதற்குரிய நிதியைப் பெறுவதற்கான முயற்சியையும்.

**கௌரவஉப தவிசாளர் V.ஜெயச்சந்திரன் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, எங்களுடைய சம்மாந்துறை டிப்போ சாலை ஊழியர்கள் வந்து என்னை சந்தித்து மாவட்ட அமைப்பாளர் என்ற முறையில் உதவி கோரினர். நான் தனக்கென ஒரு வேண்டுதலை சமர்ப்பித்திருக்கின்றேன். போக்கு வரத்து அமைச்சர் நிமால் ஸ்ரீபாலடி சில்வா அவர்களுக்கு எத்திவைத்திருக்கின்றேன். என்னால் ஒரு 02 million காசு எடுக்க முடியும்

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

அதனுடைய உண்மை என்னவென்றால் நானும் அதில் முயற்சி எடுத்தேன். அவர்களின் Position என்னவென்றால் இது ஒரு Complete work Shop அல்ல.தற்போது இருப்பது இஞ்சின் Ripiars. அப்படியான வளங்கள் எல்லாம் அம்பாரையில் ஏற்கனவே இருக்கின்றது. அதனை இப்படிச் செய்வதற்கு அங்கேயே கொன்டு போகலாம் என்றவுடன் நான் விட்டுவிட்டேன். மாற்று வழியைப்பார்த்தால் இதற்குள் ஒரு செட் அடித்து இவர்களை அனுப்புவேமா? என்று. அதன் பின் எங்களுடைய காலம் முடிந்துநாங்களும் போய்விட்டோம். Office இயலாக நமதுCTB போனால் வராது அதுதான் பிரச்சினை. டயர் Work Shop இக்கினியாகல வீதியில் உள்ளது. அதில் வேண்டிய அளவு இடம் இருக்கின்றது.அதற்காகத்தான் இந்த இடத்தை இப்பே இங்கேயும் இல்லை. இதைச் செய்யவும் வேண்டும். செய்வதற்கு இது தடை ஆனால் அதிகமானComplints இருக்கின்றது. பழைய மார்கட் உள்ள Work Shopஇன் நடவடிக்கைகள் பற்றி அதிகமானcomplaints உள்ளது. இங்கு பொம்பிளைப்பிள்ளைகள் இருப்பதால் சொல்லவில்லை. சில விடயங்களைப் பற்றி கதைக்க முடியாது. ஆனால் அதிகமான Complaints அப்படி 02 முடிவு எடுப்போம்.

அபகாஸ் விடயமாக அபகஸ் உன்மையாக எனக்கு தெரிந்தளவுக்கு நான் இதற்கென்று படிக்கவில்லை. It is a Education game. அது அறிவு குறைந்த பிள்ளைகளுக்கு கணக்கு படிப்பதற்குரிய Mind Work தான்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எம்.எம். றியாஸ் அவர்கள்:**
இது பொதுவாக எல்லோருக்கும் அறிவு பூர்வமான மூளை வளர்ச்சியை அதிகரிக்கச் செய்கின்ற ஒரு விடயம்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அதற்கு ஒரு completed Proposal ஒன்று செய்து நாம் சபையில் தீர்மானிப்போம். அதற்கு அப்பால் ஏனைய விடயங்களில் நான் உங்கள் கவனத்திற்கு கொண்டு வரவேண்டிய ஒரு முக்கியமான விடயம் இருக்கின்றது.

**கௌரவ உறுப்பினர் எம்.எஸ். சரீபா அவர்கள்:**
மன்னிக்க வேண்டும் தவிசாளர் அவர்களே, பெண்கள் இருப்பதால் சொல்ல முடியாது என்று சொன்னால் களத்தில் இறங்கி விட்டால் எல்லாம் தெரிந்திருக்க வேண்டும். என்பதில் நானும் இருப்பவள்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
மன்னிக்கவும், இனி அந்தச் சொல்லைப் பாவிக்க மாட்டேன்.

**கௌரவ உறுப்பினர் SM.முஸ்தபா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இன்று நடைபெற்ற கூட்டத்தில் ஒரு முக்கியமான விடயம் ஒன்று எடுத்துக் கொள்ளப்பட்டது. எங்களுடைய மையவாடிகள் பராமரிப்பது சம்பந்தமாக இந்த சபையின் கட்டுப்பாட்டில் இல்லாததால் அதனை சபைக்கு எங்களுக்குபராமரிக்க முடியாமல் இருப்பதனால் இது கையறும் நிலையை நாங்கள் உணரக்கூடிய நிலையில்இருக்கின்றோம்.என்னுடைய அபிப்பிராயம் என்னவென்றால் இதனை அவசரமாக கவனத்தில் கொள்ளப்பட்டு விடை காணப்பட வேண்டிய விடயம். மிக முக்கியமாக இன்று எங்களுடைய மஹல்லா மஹல்லா மையவாடியினை எடுத்துக் கொண்டாலும் சரி,செந்நெல் கிராமத்தில் உள்ள அழ்பர் மையவாடியையும் எடுத்துக் கொண்டாலும் சரி, இன்று ஒரு இரவு நேரங்களில் ஒரு மையத்தை அடக்க போகின்ற போது அந்த மைய்யத்தை அடக்குவதற்கான ஏற்பாடு, கபூரடியில் ஏற்பாடு இருந்தாலும், அங்கு போக்குவரத்து செய்பவர்கள் சிரமப்படக்கூடிய ஒரு நிலைப்பாடாக,வெளிச்சமூட்டிக் கொள்ள முடியாத நிலைப்பாடாக இருந்து கொண்டிருக்கின்றது.

எனவே இந்த மையவாடிகள் அனைத்தும் அவசரமாக எங்களுடைய சம்மாந்துறை பிரதேச சபையினுடைய கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரக் கூடிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, அம் மையவாடிகள் சம்மாந்துறை பிரதேச சபையினால் கண்காணிக்கப்பட்டு, அது பராமரிக்கப்பட வேண்டும்.அதற்கான நடவடிக்கைகள் அவசரமாக இந்த சபையினால் முன்னெடுக்கப்பட வேண்டும் என்ற முன்மொழிவினை இந்த சபையில் முன்வைக்கின்றேன்.

அதே போன்று, இன்று எங்களுடைய முக்கியமான விடயம் என்னவென்றால் நான்எதிர்கால பாராளுமன்றங்களில் முன்வைக்கப்படுகின்ற ஒரு மசோதாவாக மீளமைக்கப்பட்ட தொகுதி வாரி எல்லை நிர்னயங்கள் பாராளுமன்ற உறுப்பினர்களிடம் அங்கீகாரம்பெறுவதற்கு முன் மொழிவதற்கான சந்தர்ப்பங்கள் கூடுதலாக இருந்து கொண்டிருக்கின்றது. அந்த விடயம் சம்பந்தமாக கௌரவ சபையால் கவனம் செலுத்தப்பட்டுஎங்களுடைய ஊர் பாராளுமன்ற உறுப்பினர்களாக இருந்தாலும் சரிதான் அல்லது முஸ்லீம் பாராளுமன்ற உறுப்பினர்களாக இருந்தாலும் சரிதான் அல்லது சிறுபான்மையைக் கவனத்தில் கொண்டிருக்கின்ற பாராளுமன்றமாக இருந்தாலும் சரிதான், சிறு கட்சிகள், சிறுபான்மைக்கட்சிகள் அனைத்துமே இன்று முன் மொழியப்படுகின்றது.

குறிப்பாக கூறப் போனால் சம்மாந்துறை தொகுதியொன்று எல்லை நிர்னயிக்கப்பட்டிருக்கின்றது. அந்த எல்லையானது சம்மாந்துறை மக்களைப் பொறுத்தமட்டில் மிகவும் பாதிப்புக்குள்ளாகின்ற நிலையில் இருந்து கொண்டிருக்கின்றது. அதே போன்று அம்பாரை மாவட்டத்தில் உள்ள ஏனைய

பகுதிகளை எடுத்துக் கொண்டாலும் அது பாதிப்பை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றது.நாடு தளுவிய ரீதியில் சிறுபான்மை மக்களும், விசேடமாக முஸ்லீம் மக்களுக்கு அல்லது சிறுபான்மை மக்களுக்கு இது பாரிய விளைவினை ஏற்படுத்தக் கூடிய ஒரு மசோதாவாக இருந்து கொண்டிருக்கின்ற படியால் இந்த சபைக்கு முன்மொழிவை வைக்கின்றேன். நாங்கள் தீர்மானமாக கௌரவ பாரபளுமன்ற உறுப்பினர்கள் இந்த மொழிவுக்கு சாதகமாக வாக்களிப்பதில் இருந்து தவிர்ந்து கொள்ள வேண்டும். அல்லது வாக்களிக்ககூடாதென்ற முன்மொழிவினை நாங்கள் எங்களது சபையினூடாக அறிவித்து வைப்பது ஒரு சிறந்தது.என நான் என்னுடைய முன் மொழிவினை முன் மொழிகிறேன்.

மிக முக்கியமான விடயம் பேசப்பட்டது. மாகாண சபையினால் அனுமதிக்கப்பட்ட 10 ஊழியர்கள் இவர்களுடைய கடமைகள் சம்பந்தமாக இவ்விடத்தில் ஒருவராலும் Focusபன்னுப்படவில்லை. அவர்கள் இருப்பதால் எங்களுடைய ஏனைய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு சிரமமாக இருப்பதாகவும், அவர்களுடைய உரிய வேலைகள் நடைபெறாமல் இருப்பதாகவும் அது சம்பந்தமாக நாங்கள் அவர்களுடையகாடர் Procedureஇல் அவர்ள்க என்ன Categories இல் எடுக்கப்பட்டார்களோ அதாவது கிளரிகல் வேலைக்குப் போதுமான Categories இல் உள்ளவர்கள் என்று சொன்னால் அந்த category யில் அவர்களை மாற்றி அவர்களுக்குரிய வேலையை வாங்கி ஏதாவது செய்ய வேண்டும். அதை கௌரவ தவிசாளர் அவர்கள் கடமைப்பட்டிருக்கின்றார்கள். இல்லை என்றால் அவர்களுக்குரிய வேலைகள் உரிய முறையில் செய்யப்பட வேண்டும்.

இன்னொரு விடயம் கவனத்தில் கொள்ளப்பட்டது. CTB Work Shop விடயம் சம்பந்தமாகவும், தற்போது CTB Work Shop க்கு ஒதுக்கப்பட்டிருக்கின்ற இடத்திற்கு பக்கத்தில் எங்களுடைய சபைக்குரிய காணியும் இருக்கின்றது. சம்மாந்துறை நீதவான் நீதி மன்றத்திற்குப் பக்கத்தில் அந்தக்காணி இருக்கின்றது. Work Shop அங்கு அமைகின்ற போது,நீதவான் நீதி மன்ற கட்டடத் தொகுதி நீதி மன்ற கடமைகளை ஆற்றுவதில் உள்ள தடங்கலும், நீதி மன்றத்தை இங்கு எடுப்பதா?நீதி மன்றத்தை அபிவிருத்தி செய்வதா?என்ற கேள்வி இருக்கின்றது. அவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற போது, அந்த விடயத்தைக் கவனத்தில் கொண்டு செய்ய வேண்டும் என்பது என்னுடைய பணிவான அபிப்பிராயம்.

இன்னொரு விடயம் இந்த சபையில் நாங்கள் பேசுகின்ற போது தவிசாளர் அவர்களால் குறிப்பிட்டு காட்டப்பட்ட விடயம் ஒன்று சம்மாந்துறையில் அமையப் பெற்றிருக்கின்ற கட்டடங்கள். எங்களுடைய உப தவிசாளர் அவர்கள் கூறினார்கள் வளத்தாப்பிட்டியில் அமைந்திருக்கின்ற வனவிலங்கு அலுவலகம் அமைந்திருக்கும் கட்டடம். இவ்வாறான ஒன்றுக்கு மேற்பட்ட கட்டடம் அது பிரதேச சபைக்குரிய கட்டடடமா? அல்லது பிரதேச செயலகத்துக்குரிய கட்டடமா? அரசாங்க கட்டடமா? யாருக்குரிய கட்டடம் என்று தெரியாத நிலையில் இருக்கின்றது. என்னுடைய அபிப்பிராயம் என்னவென்றால் அவ்வாறான கட்டடங்களை நாங்கள் சட்டரீதியாக பிரதேச சபைக்குரிய காணிகளாக, கட்டடங்களாக அவைகளை கையகப்படுத்தி, அதற்கான முயற்ச்சிகளை மேற் கொண்டு நாங்கள் அதனைப் பராமரித்து வருமானம் ஈட்டக்கூடியதாக பயன்படுத்துவதற்கு எங்களுக்கு ஒரு தடையும் இல்லை. இந்த விடயத்திற்கு அவசரமாக ஒரு குழுவை நியமித்து சம்மாந்துறை பிரதேச சபை எல்லைக்குட்பட்ட காணிகளில் அமைந்திருக்கின்ற கவனிப்பார் அற்று அல்லது பராமரிப்பற்றுக் காணப்படுகின்ற கட்டடங்களை பிரசே சபையின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டு சட்ட ரீதியாக கையகப்படுத்தப்பட வேண்டும் என்பது எனது அபிப்பிராயம்.

**தீர்மானம் 24**

மையவாடிகள் அனைத்தும் அவசரமாக கவனத்தில் எடுத்து செயற்படுவதற்கும், சம்மாந்துறையில் அமையப் பெற்றுள்ள பொது கட்டடங்களை பிரதேச சபை சட்ட ரீதியாக எடுப்பதற்கும் சபை ஏக மனதாக தீர்மானிக்கின்றது.

பிரேரித்தவர் : கௌரவ உறுப்பினர் எஸ்.எம்.முஸ்தபா

ஆமோதித்தவர் : கௌரவ உறுப்பினர் எம்.ரீ. பௌசுள்ளாஹ்

**கௌரவ உப தவிசாளர் V.ஜெயச்சந்திரன் அவர்கள்:**
உண்மையில் இரு சிறந்த தீர்மானம் இதை நான் வரவேற்கின்றேன் என்னவென்றால் வளத்தாப்பிட்டி அம் 14 ஆம் வீதியில் உள்ள தபால் நிலையம் அமைந்துள்ள கட்டடம் மறைந்த அமைச்சர் அஸ்ரப் அவர்களினால் அமைக்கப்பட்ட தபாலக் கட்டடம் இன்று வரை திறக்கப்பட வில்லை.திறப்பதற்கு பல முயற்சிகள் செய்தார்கள். எங்களுடைய கௌரவ உறுப்பினர் மாஹிர் Sir அவர்களும் இதனைத் திறப்பதற்கு முயற்சி செய்தார். ஆனால் திறக்கமுடியாமல் போய்விட்டது. ஆனால் இன்று அந்த தபாலகத்தின் எல்லைகள் மக்களால் பிடிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. காணியை கட்டம் கட்டமாக வேலியை நகர்த்தி எடுக்கின்றனர். இது ஒரு பொதுச் சொத்து. தபாலக திணைக்களத்தினால் இதனைப் பாதுகாப்பதற்கு நிதி இல்லை என்று கூறிவிட்டார்கள். பிரதேச செயலகமும் இது எங்களுக்குப் பொறுப்பல்ல என்று கூறிவிட்டது. அப்படியானால் யார் இவற்றுக்குச் சொந்தக்காரர்கள் பொது மக்களின் சொத்து இதனைப் பாதுகாப்பதற்கு சபையால் நடவடிக்கை எடுத்தால் சிறப்பான ஒரு விடயமாக இருக்கும் என நான் கருதுகின்றேன்.

**கௌரவ உறுப்பினர் ஏ. யூசுப் லெப்பை அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, தபாலகம் சம்பந்தமாக கூறிவிட்டுச் சென்றார் அந்த தபால் கந்தோர் இஸ்மாயில் புரம் அமைக்கப்பட்ட காலத்தில் அந்தக் கிராமத்திற்கு தபாலகம் வேண்டும் என்ற அடிப்படையில் தான் கட்டட நிர்மானம் ஏற்பட்டது. அந்தக் கட்டடத்திற்கும் தபால் திணைக்களத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை. அதே போல் வண்டு வாய்கால் Juntionஇலும் அது மாதிரி கட்டடம் இருக்கின்றது. நான் 33 வருடங்களாக தாபல் சேவையில் இருந்து கொண்டிருக்கின்றேன். இந்த தபால் திணைக்களத்தின் சம்மாந்துறையைப் பொறுத்தமட்டில் இன்று காத்தான்குடியில் முதலாம் தர அஞ்சல் அலுவலகம் இருக்கின்றது. நியூ காத்தான்குடியில்இருந்த உப அஞ்சல் அலுவலகம் தபால் அலுவலகமாக தரம் உயர்தப்பட்டுள்ளது.

அதேபோால் சம்மாந்துறையும் சனத்தொகை கூடிய ஒரு பாரிய பிரதேசம். எனது நீண்ட நாள் கனவும் என்னப்பாடும் சம்மாந்துறையில் இன்னுமொரு தபால் அலுவலகம் ஏற்படுத்தப்பட வேண்டும். அதற்காக கடந்த காலங்களில் எமது கௌரவ அமைச்சர் ரவூப் ஹக்கீம் தபால் அமைச்சராக இருக்கின்ற போது நான் அதற்கான யோசனையினை அன்றே முன்வைத்திருந்தேன் அது ஏனோ நிறைவேற்றப்பட வில்லை.

இன்று நான் அம்பாரை மாவட்ட தபால் தொலைத் தொடர்புகள் சேவையாளர் சங்கத்தின் அம்பாரை மாவட்ட தலைவராக இருக்கின்றேன். தெகியத்தக் கண்டி உட்பட இதன் அடிப்படையில் எமதுதொழில் சங்கத்தின் ஊடாக சம்புமடு உப அஞ்சல் அலுவலகம் சபூர் சனச உப அஞ்சல் அலுவலகம் போன்ற உப அலுவலகங்கள் அஞுசல் அலுவலகமாக மாற்றப்பட வேண்டும் என்று கேட்டிருக்கின்றேன்.

மல்வத்தைக்கும் அதேமாதிரி Post office Grade க்கு Upgrade பன்னுப்பட வேண்டும் என்று சொல்லி அப்படி ஒன்று வருகின்ற நேரத்தில் தபால் போக்குவரத்திற்காக Bus Route உள்ள இடங்களுக்குத்தான் Post Office நகர்த்தப்படும். அதற்கு நாங்கள் ஒரு பொருத்தமான இடத்தை தெரிவு செய்து தபால் திணைக்களத்திற்கு வழங்க வேண்டும் என்பது எனது கோரிக்கை.

இதே போன்று Post office Upgradeபன்னப்படுகின்ற நேரத்தில் புதிய தொரு உப அஞ்சல் அலுவலகம் கொச்சிக்காய் தூளர்ர சந்தியிலும் அமைக்கப்பட வேண்டும். புதிய அஞுசல்அலுவலகம் என்பது தபால் திணைக்களம் இயங்கும் நிர்வாக அமைப்பு முறையில் தற்போது புதிய அலுவலகத்திற்கு அஞ்சல் அதிபர் அனுமதி வழங்கப் போவதில்லை. சில இடங்களில் வருமானம் குறைந்த அலுவலகங்கள் மூடப்பட்டு இந்த இடங்கள் வேறு இடத்தில்

அமைந்திருக்கின்றன. இவ்வாறு நாங்கள் ஏற்பாடு செய்கின்றோம். தபால் விடயங்களை நிச்சயமாக உங்களுடன் தொடர்டபு பட்டு செய்வேன்.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம்.மாஹிர் அவர்கள்:**
வளத்தாப்பிட்டி தபால் கந்தோர் சம்பந்தமாக கௌரவ அமைச்சர் ஹலீம் அவர்களைச் சந்தித்து உரிய தகவல்களை அனுப்பி வைத்ததன் பிரகாரம், சம்மாந்துறை பிரதேச செயலகத்திற்கு சேவையர் செய்து எல்லைகளை அடயாளப்படுத்துமாறு அவர்கள் அறிவுறுத்தியதற்கு அமைய சேவையர் Department மூலம் அதற்குரிய முயற்சிகளை DS செய்தார். அந்தக்கட்டத்திலே அது இருக்கின்றது. இங்கு அடுத்தாக கௌரவ உறுப்பினர் யூசுப் கூறியது போல் இலங்கையில் எங்கேயும் எந்த ஒரு இடத்திலும் புதிதாக உப தபால் அலுவலகத்தை திறக்க முடியாது. ஏதாவது உப தபாலகம் தபாலகமாக தரம் உயர்த்தப்படுகின்ற சந்தப்பத்திலேயே அந்த வெற்றிடத்துக்கு அதனை நிறப்பலாம். அல்லது மூடப்படுகின்ற இடத்துக்குஇதனை நியமிக்கலாம். அதற்கு முதல் இதனை தபால் திணைக்களத்திற்கு சொந்தமானஒரு சொத்தாக பிரகடனப்படுத்தி அந்த உரிய அமைச்சர் சம்மாந்துறை பிரதேச செயலகத்தில் அறிவுறுத்தும் நிலையில் இருக்கிறது. அதற்குரிய முயற்சிகளை இந்த சபை முன்னெடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
கௌரவ உறுப்பினர் முஸ்தபா அவர்கள் முன்வைத்த பிரேரனைகளில் ஒன்று இந்த Delimitation Prososs என்பது அரசாங்கத்தினால் ஒரு குழு அமைக்கப்பட்டு அதற்குரிய எல்லா மக்களின் பங்களிப்போடுதான் துரதிஸ்ட வசமாக இதில் நம்மட பகுதியில் இதில் அக்கரை செலுத்துவது குறைவு. அதற்காக மிகவும் கூடுதலாக விமர்சிக்கப்பட்டவன் நான். ஆனால் இந்த ProvincialDelimitation நடந்த நேரம் அரசியல் ரீதியாக என்ன பங்களிப்பு செய்யப்பட்டதென்று தெரியாது.அனால் இன்றைக்கு வெளிவந்திருக்கின்ற Delimitation அது எத்தனை பேருக்கு தெரியுமோ தெரியாது. நிந்தவூர், சம்மாந்துறை, நாவிதன்வெளி, காரைதீவு அவ்வளவும் சேர்ந்து சம்மாந்துறை எல்லை.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம்.மாஹிர் அவர்கள்:**
Provincial Delimitation Reportஇல் சம்மாந்துறையில் வளத்தாப்பிட்டி - 02 கிராம சேவகர் பிரிவுகளும் நீங்கலாக சம்மாந்துறையும் காரைதீவு, நிந்தவூர்,பிரதேச சபைக்குட்பட்டவைகள் சம்மாந்துறை தொகுதியாகும் நாவிதம்வெளி, உகனையுடன் சேர்க்கப்பட்டுள்ளது. வளத்தாப்பிட்டி அட்டாளைச்சேனையுடன் சேர்க்கப்பட்டுள்ளது.

நாங்கள் கொடுத்த எங்களுடைய முன்மொழிவு இறக்காமம் பிரதேச சபை, நாவிதன்வெளி பிரதேச சபை, சம்மாந்துறை பிரதேச சபை இந்த 03 உம் அடங்கலாக சம்மாந்துறை மாகாணசபைத் தொகுதி வரவேண்டும். என்று எழுத்து மூலம் நான் நேரடியாக கொண்டு சமர்ப்பித்தேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அப்படியானால் பாராளுமன்னத்திற்கு வைத்திருக்கும் இந்த முடிவை இந்த சபை ஏகமனதாக நிராகரிக்கின்றது. என்றும் என்னவென்றால் பாராளுமன்ற உறுப்பினர்களை வாக்களிக்க முடியாது என்று சொல்ல முடியாது. ஏற்றுக் கொள்வோம், அல்லது இல்லை என்று தீர்மானம் எடுக்கலாம்.

**கௌரவ உறுப்பினர் SM.முஸ்தபா அவர்கள்:**
Honorable Chairmen என்னுடைய ஆதங்கம் என்னவென்றால் நாங்க இந்த விடயத்தை உள்வாங்கியிருக்கின்றோம் எங்களது கருத்தை நாங்கள் அவர்களிடம் கூற வேண்டும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

அதனைத்தான் சொல்கின்றேன். இது இந்த ஊருக்கும் பல இன மக்கள் வாழ்கின்ற இந்தக்கட்டமைப்பு முன்னெடுக்கின்றது என்பதையும் அப்படியே எழுதுவோம்.

**கௌரவ உறுப்பினர் A.அச்சி முஹம்மட்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, நாங்கள் அதனை நிராகரிக்கவில்ல. அதனை மாற்ற வேண்டும் அத்தோடு புதிய திட்டமாக அந்த 03 உம் அமைய வேண்டும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

உங்களில் எத்தனை பேருக்குத் தெரியுமோ தெரியாதோ, இந்த ஊரில் வளர்ச்சி குறைந்த பிள்ளைகளுக்கென்று ஒரு பாடசாலை இருக்கின்றது. அது ஆரம்பித்தது 04 ஆம் குறுச்சியில், நான் பாராளுமன்ற உறுப்பினராக இருக்கின்ற காலத்தில் மருதமுனைNGO white Flower என்ற நிறுவனம் தான் அதனை ஆரம்பித்து இருந்தது. நான் ஒரு பழக்கமாக வீட்டை விட்டு வெளியேறும் போது அந்த இடத்துக்குச் சென்று அரை மணித்தியாலம் அந்தப் பிள்ளைகளுடன் இருந்துதான் நான் மற்ற வேலைகளுக்குச் செல்வேன்.

அதன் பிறகு UNISEF எல்லாம் ஈடுபட்டு அந்தப்பிள்ளைகள் ஒரு பாடசாலையில் உள்வாங்கப்பட வேண்டும் என்று. இன்றைக்கு அது அல் அர்சத்பாடசாலையில் இருக்கின்றது. அதனைப் பராமரித்து வருவது ஒரு ASSN என்கின்ற NGOஒரு Networkஅதில் அந்த ஆசிரியர்களுக்கு ஒரு சின்னAllowance தான் கொடுத்து வருகின்றார்கள். அப்படியான ஒரு அமைப்பு இந்த சபையினால் பராமரிக்கப்படுகின்ற போது இந்த சபைக்கு ஒரு கௌரவத்தை அல்லது ஒரு நன்மதிப்பை கொண்டுவாருவதற்கு ஒரு விடயமாகநான் கருதுகின்றேன். ஏனென்றால் அந்தப் பிள்ளைகள் இவ்வளவு காலமும் வீடுகளில் ஒதுக்கப்பட்டு இருந்த பிள்ளைகள் இன்றைக்கு அந்தப்பிளளைகளுடன் அரைமணித்தியாலம் இருந்தீர்களேயானால் உங்களுக்கு விளங்கும். இதை கௌரவ அதி மேதகு ஜனாதிபதி அவர்கள் இந்த முறை கொள்கை விளக்க முயற்சியிலுயும் அந்த Subjectஐ தொட்டுவைத்திருந்தார்.

அப்படியான அமைப்புக்கள் உருவாக வேண்டும். நான் இதனை ஆளுனருடன் தொட்டு வைத்துவிட்டு வந்திருக்கின்றேன். இதனை மாகாண சபையில் அல்லது பிரதேச சபையினால் இந்த நிறுவணங்கள் நடாத்தப்பட வேண்டும். ஏனென்றால் அது இறைவனின் செயல் அந்தப் பிள்ளைகளுக்கு எவ்வளவு சாதாரணமான வாழ்கையைக் கொடுக்க முடியுமோ அதற்கு நாம் உதவ வேண்டும். நம்பிக்கையாளர் சபையுடனும் நான் இது பற்றி பேசினேன்.அவங்கட சக்காத்தில் அவர்களுக்கும் ஒரு ஒதுக்கீடு செய்யச் சொல்லி. ஏனென்றால் சில பெற்றோர்கள் அதனை ஒரு சுமையாக எடுக்கின்றனர். அந்த சுமையை இலகுவாக்குவதற்கு இந்த சபையினால், நாம் மாகாண சபையுடன் தொடர்பு கொண்டு எந்த வழியுடன் இந்தப்பிள்ளைகளுக்கு உதவலாம். என்பதை ஆராய்வதற்கு உங்கள் கருத்துக்கள்.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம்.மாஹிர் அவர்கள்:**

மாகாணசபை மாத்திரம் அல்ல மத்திய அரசும் Social சேவை Ministry

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

எல்லாம் இருக்கு 02 Teachers உம் நியமித்திருக்கிறார்கள்But போய் பார்த்தீர்கள் என்றால் இல்லை Social Service / Department இல வளம் குறைந்த பிள்ளைகளுக்கு இருக்கின்ற குடும்பங்களுக்கு வீடு கட்டுவெதென்று இருக்கிறது.அதுDs Office ஆல் யெய்யப்படுகிறது.இல்ல ஒரு DS Office க்கு 03 க்கு அல்லது 05 தான் அதனோடு நிக்கின்றது.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம்.மாஹிர் அவர்கள்:**

நாங்கள் ஒரு பிரேரனையாக கொண்டு வந்து உரிய அமைச்சுக்கும் கிழக்கு மாகாண சமூக சேவைத் திணைக்களத்திற்கும் அனுப்பிவைத்தால் கூடுதலான நிதியைப் பெற்றுக் கொள்ளலாம்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அதனை Proposal ஆக முன்மொழிவோம்.

**கௌரவ உறுப்பினர் A.அச்சி முஹம்மட்:**
அதற்குரிய Teachers மாரையும் வளம்படுத்த வேண்டும். அவங்களுக்கும் ஒரு நிலையான சம்பளம் வழங்க வேண்டும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அதனை நாம் முன்மொழிந்து மாகாண சபையூடாக அல்லது மத்திய சபையின் உதவியுடன் அதனைச் செய்யலாம்.

சபையினால் ஆலோசனைக் குழுக்கள் உருவாக்கப்படுவதற்கு எல்லோரிடமும் நான் Recommendation கேட்டிருந்தேன். இது வரைக்கும் 03 அங்கத்தவர்கள் எனக்கு சில பெயர்களை முன் மொழிந்திருக்கின்றார்கள். இதில் 04 Comittees இருக்கும் இதில்Senioroty அடிப்படையில்

Finace & Planing& Policy Making Communityக்கு நான் தவிசாளராகவும் இருப்பேன் அது கட்டாயப்படுத்தப்பட்டது.

Housing & Commiunity Development விடயத்தில் கௌரவ உறுப்பினர் முஸ்தபா அவர்கள் அந்த விபரம் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று You are Senior Member நீங்க அந்த குழுவுக்கு chair பன்ன வேண்டும்.

Technical &service Mr.Aci Mumamed

Enviornment amenities க்கு கௌரவ உப தவிசாளர்

நீங்கள் 03 பேரும் இந்த Communityக்குரிய வேலைகளை ஆரம்பிக்க வேண்டும். நமக்கு 02, 03 Recomendaton இருக்கிறது. அதே நேரம் நிபுனத்துவர்கள் ஒவ்வொரு எல்லைக்கும் இருக்கின்றவைகளை செய்து Communityயை ஒழுங்காக இயக்கி Proposal களைசபைக்கு கொண்டு வாற நேரம் இலகுவாக இருக்கும். ஏனென்றால் அதுadvisory Committees தான்.

**கௌரவ உறுப்பினர் A.அச்சி முஹம்மட் அவர்கள்:**
நமது ஊருக்கு அப்பால், உதாரணமாக கல்முனையில் உள்ள ஒருவர் இக்குழுவிற்கு திறமையான ஒருத்தரை நியமிக்கலாமா?

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அவர்கள் Committee memberஆக இல்லாமல் Advisor ஆக எடுக்கலாம். ஏனென்றால் இந்த Member இந்த எல்லைக்குட்பட்டவராக இருக்க வேண்டும்.
இருக்கிற Member ஏனைய கௌரவ உறுப்பினர்களும் நீங்கள் சிபார்சு செய்கின்ற பெயர்களை தயவு செய்து அதில் நிபுனத்துவம் உள்ள நபர்களை நீங்கள் சிபார்சு செய்தால் நான் அந்த Committee க்கு Allocateசெய்து அந்த விடயங்களை ஆரம்பிக்கலாம்.

**கௌரவ உறுப்பினர் கே.எல். சிஹாமா**

அஸ்ஸலாமு அலைக்கும் தவிசாளலர் அவசர்களே, சபைக்கு சமர்ப்பிக்கப்படும் கடிதங்கள், மனுக்கள் மற்றும் விடயங்கள் எனது அபிப்ராயப்படி 02 விடயங்களை மேலதிகமாகச் சேர்தால் மிகவும் நல்லதென்று நினைக்கின்றேன்.

தற்காலத்தில் பாடசாலைக்குச் சென்று வீட்டில் இருக்கும் பெண்மணிகளுக்கு பயிற்சிப் பட்டறைகளை நமது பிரதேச சபை ஊடாக நடத்தலாம் என்று நினைக்கின்றேன். அப்படிச் செய்ய முடியாவிட்டாலும் வெளி இடத்தில் அதாவது Local Government அல்லது கைத்தொழில் பேட்டை அமைச்சின் கீழ் இருந்து கைத்தொழில் பேட்டை பயிற்சிப் பட்டறையை எடுத்து இந்த சம்மாந்துறையில் அந்த பயிற்சிகளை நடாத்தி அவர்களுக்குரிய வாழ்வாதாரத்தையும் நாம் பூர்த்தி செய்யலாம் என்று நினைக்கின்றேன்.

நான் காலையில் சென்று கொண்டிருக்கும் போது, நேரடியாக கண்ட விடயம். அதாவது அஸ்ஸமா பாசாலைக்குச் செல்லும் மாணவர்கள் வண்டு வாய்கால் மறுபுறம் அதாவது சம்புமடு சைட்டில் இருந்து அஸ்ஸமா பாடசாலைக்கு வரும் போது மானவர்கள் வண்டைச் சுற்றி வந்து அந்தப் பாடசாலைக்கு ஏறுகின்றனர். அல்லது வண்டுக்குள்ளால் வந்து ஏறுகின்றனர். அது Irrigation Department உரிய வண்டாக அல்லது ஏரியாவாக இருந்தாலும், நாம் மக்களின் பணிக்காக வந்தவர்கள் ஆகவே மாணவர்களின் கஸ்டத்தை உள்ளத்தில் வைத்துக் கொண்டு அவர்களுக்காக நாம் IrrigationDepartment இல் கதைத்து அதற்கு ஒரு பாலம் அமைக்கலாம்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

அதனைRural Bridges க்கு கீழ் ஒரு Proposal ஆக கொடுக்க வேண்டும். ஒரு சந்தோசமான செய்தி Rural Bridges Project இற்கு கீழ் Irrication Engneer எனக்கு 04 பாலங்களை முன்மொழிந்திருந்தார். அதை 10 ஆம் திகதி உள்ளூராட்சி மாகாண சபை, உள்ளூராட்சி அமைச்சு ChiefSecretary க்கு அனுப்பியிருக்கின்றது. அந்தப்பாலங்கள் பட்டாம்பிட்டி பாலம், திராமடு மோறாவில் பகுதியில் கிராமடு என்ற ஆற்றில் 02 பாலங்கள் அடுத்து கல்லியம் பத்தை இறக்கம். இந்த 04 பாலங்களுக்கும் அதனைInspectசெய்து அதன் Report அனுப்பச் சொல்லி மாகாண சபைக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அதே போல் இந்த Rural Bridges க்குக் கீழ் பாலம் அமைக்கப்பட வேண்டுமென்றால் அது ஆழமும் கூட,ஏனைய பாலங்கள் ஒன்றில் போடலாம்.

**கௌரவ உறுப்பினர் கே.எல். சிஹாமா**

அடுத்தாகதனிப்பட்ட ரீதியானது பிரதேச சபையின் வருமானத்தை கூட்டுவதற்கான என்னுடைய சில அபிப்பிராயங்கள்: விளம்பரப் பதாதைகளை அமைக்கலாம். அதாவது அந்தத் தொங்கலுக்கும் இந்தத் தொங்கலுக்கும் அமைக்கலாம்.
இது பாரிய பிரதேசம் என்ற வகையில் இங்கு அதிகமான கடைகள் காணப்படுகின்றது ஆனால் கடைகள் அனைத்தும் பதியப்பட வேண்டும். அனைத்தும் பதியப்பட்டிருக்கின்றதா என்பது ஒரு கேள்விக்குரியது. அதற்குப் பொறுப்பான வர்கள் உரிய இடத்திற்கு அவர்களே சென்று அந்தக் கடைகளை பதிய வைத்து அதன் மூலம் வருமானத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

தற்காலத்தில் வீடுகள் அதிகமாக கட்டுகின்றனர் பழைய வீட்டை உடைத்துக் கட்டுபவர்கள் வீட்டை உடைத்து வீதியில் போடுகின்றனர். அதனை அப்புறப்படுத்துவதற்கு வாகனங்கள் கிடைக்காததனாலும், ஆட்கள் கிடைக்காத பிரச்சினையாலும் சிரமப்படுகின்றனர். ஆகவே பிரதேச சபையில் இருக்கின்ற வாகனங்களைக் கொண்டும் அல்லது ஊழியர்களைக் கொண்டும் அப்புறப்படுத்தி அதற்குரிய வருமானத்தை பிரதேச சபையில் பெற்றுக் கொள்ளலாம் என்று நான் நினைக்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

இவைகள் ஆக்க பூர்வமான கருத்துக்கள் இந்தக் கட்டடங்களும் இந்தக் கழிவுகளும் அகற்றுலும் பாரிய ஒரு சமூக சவால் உங்களுக்குத் தெரியும் இந்த ஊரில் கடடப்படுகின்ற 90 வீதமான கட்டங்கள் சட்ட விரோதமான கட்டடம். அது எவ்வளவு சொல்லியும் எல்லாம் சட்டவிரோதமானது. எந்தப்பிரச்சினை வந்தாலும் போய்ப் பார்த்தாலும் இது சட்ட விரோதமான கட்டமாகத்தான் இருக்கும்.

ஒரு வண்டில் மண் இடுவதற்கு வளவுக்குள் வளியில்லை ஆனால் ஒரு Dump Truck மண், கல்லைக் கொண்டு வந்து பாதையில் போடுவது போன்ற சவால் இருக்கின்றது. இதகு ஏற்கனவே ஒரு முயற்சி ஒன்று செய்யப்பட்டது. இன்ஸாஅல்லாஹ் இந்த நோன்பு முடிந்தவுடன் சட்ட நடவடிக்கைகளுக்கு இறங்க வரும். இல்லாவிட்டால் பாரிய பிரச்சினை ஒன்று வரும். ஏனென்றால் எல்லாக் கல்வெட்டும் Under threat ஏனென்றால் இந்த Dump Truckவந்து அவ்விடத்தில் இறங்கும் நேரம் அந்த வடிகான்கள் ஒன்றும் லோட் எடுப்பதற்கு இடங்கொடுக்குதில்லை.எல்லாம் உடைகின்றது.பாதைகள் அனியாயமாகின்றது. இந்த Dump Truck கள் உள்ளே வருவதை தடை செய்ய வேண்டிய வேலைகள் உள்ளது. அதைப்பற்றி நாம் யோசிக்க வேண்டும். எல்லாப் பாதைகளும் இந்த Dump Truck லோடோடு ஓடுவது பிரச்சினையல்ல. ஓடிப் போய்Brack அடித்தால் அவ்விடத்தில் உடைந்து விடுகின்றது.

**கௌரவ உறுப்பினர் A.அச்சி முஹம்மட் அவர்கள்:**
நெல்லுப் பெட்டி ஏற்றிக் கொண்டு வருவதால் தான் இந்தப்பிரச்சினை. இல்லாவிட்டால் பெரிய Block போட்டால் Dump Truckபோகாது .

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அது செய்ய வரும். மஹாவலி ஸ்கீம்லவ வண் றோட் எல்லாத்துக்கும் அதனை அடித்து வைத்திருக்கின்றார்கள். இல்லாவிட்டால் அந்த வீதிகள் உடையும். என்று சொல்லியும் கேட்காவிட்டால் அப்படியானவிடயங்கள் செய்ய வரும்.

**கௌரவ உறுப்பினர் எம்.எஸ். சரீபா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, நேற்று எங்களுக்கு நடந்த பயிற்சிப்பட்டறைக்கு நமக்குரிய வாகனத்தைத் தந்து பெண்களுக்கு உதவி செய்ததற்கு 05பெண்கள் சார்பாக நன்றிகளைத் தெரிவிக்கின்றேன்.

அந்தப் பட்டறையில் நிறைய விடயங்களை கற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்தது. அதில் முக்கியமாக குறிப்பிடப்பட்டது என்னவென்றால், எந்த விடத்தையும் நாம் சிறு மட்டத்தில் இந்து நாங்கள் பெரும் மட்டத்திற்கு ஆரம்பிக்க வேண்டும்.சிறு மட்டம் என்பது இந்தப் பிரதேச சபை. சிறு பாரளுமன்றம் போன்றது. இந்த பிரதேச சபைக்கு நாங்கள் நேரத்திற்கு சமூகமளித்தால்தான் இந்த பாராளுமன்றத்துக்கு நேரத்திற்கு சமூகமளிக்க முடியும். ஆகவே இந்த நேரத்தை எல்லோரும் கருத்தில் கொண்டு பெண்களாகிய நாங்கள் அந்த குறிப்பிட நேரத்திற்கு வரமுடியும் என்றால் ஏன் ஆண்களால் வரமுடியாது என்று சிந்தித்துக் கொண்டிருக்கின்றேன்.

காலம் பொண்ணானது. காலத்தை நாங்கள்தான் சுருக்கி கொள்ள வேண்டும். ஆகவே எங்களது நேரத்துக்குள் நாங்கள் வேலை செய்ய பழகிக் கொள்ள வேண்டும். இதுவும் எங்களுக்கு ஒரு படிப்பினை. இந்த நேரத்திற்கு வந்தால் எங்களது ஏரியாவில்நேரத்துக்குச் செல்லலாம். நான் இதற்கு குறுகிய நேரத்தைப் பயன்படுத்தியமைக்கு மன்னிக்க வேண்டும் என்று கேட்டு முடிக்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
ஒரு காலமும் இந்த சபையில் மன்னிப்புக் கேட்டக் கூடாது.

**தீர்மானம் 25**

திண்மக்கழிவு அகற்றும் வேலைகளில் மேலதிகமான நேரங்களில் வேலை செய்த ஊழியர்களுக்கான மேலதிகமான கொடுப்பனவை வழங்க சபை ஏகமனதான தீர்மானிக்கின்றது.

பிரேரித்தவர் : கௌரவ உறுப்பினர் ஏ.சி. முஹம்மட் சஹீல்
ஆமோதித்தவர் : கௌரவ உறுப்பினர் என். கோவிந்த சாமி

சலவாத்துடன் சபை இனிதே முடிவுற்றது.

AM.முஹம்மட் நௌசாட்
தவிசாளர்
சம்மாந்துறை பிரதேச சபை
சம்மாந்துறை.

செயலாளர்
சம்மாந்துறை பிரதேச சபை
சம்மாந்துறை.